348

பாசரசு

18



வீகம்ஸீயின்

டிரேட் மார்க்

V. C.

(ஸ்தாபிதம் 1893)

குறி போட்ட நகைகளெல்லாம்

☆ சவரன் பொன்னுக்கும்

☆ முதல் தரமான வைரங்களுக்கும்

☆ மேன்மையான கைதேர்ந்த

வேலைபாட்டுக்கும்

உத்திரவாத முள்ளவை

வீகம்ஸீ சபில்தாஸ் & சன்ஸ்

பிரசித்தி வாய்ந்த வைர வியாபாரிகள்

சைனா பஜார் :: சென்னை

பாசரசு

18

24 JUN 1946
MADRAS

பதிப்பாசிரியர்கள்
எம்.எஸ்.பாசு
ஸ்ரீமதி சாகுவதி பாசு

பாசரசு காரியாலயம்
45-46, அரண்மனைக்காரத் தெரு :: ஜி·டி·, மதராஸ்

இந்த இதழில்

	பக்கம்
சுபா	5
ராஜு	7
பி. கே. முத்துஸ்வாமி	10
விஜயஸ்ரீ	15
எம். எஸ். கமலா	29
சரஸ்வதி ராமனுதன்	37
க. பஞ்சாபகேசன்	44
வெ. சு. அருணன்	53
பாசரசு	59

அணு 12

எல்லா உரிமைகளும்
பதிப்பாசிரியர்களுக்கே

கட்டுரைகளில் வெளியாகும் அபிப்பிராயங்கள் பதிப்பாசிரியர்களின் அபிப்பிராயங்களல்ல

அட்டைப் படம்

மைசூர் நாடக மண்டலி கோஷ்டியைச் சேர்ந்த லக்ஷிமிபாய். இவர் மகாத்மா கபீரில் தமிழ் கன்னடம் இரண்டு படங்களிலும் தோன்றுகிருராம்.

சென்னை-600 008

என்ன

யோசனை ?

★

வெள்ளி, தங்கம், வைர நகைகளுக்கு

புகழ்பெற்ற இடம்

☆

கே. ஆர். & சன்ஸ்

பெரியகடை வீதி : : கோயமுத்தூர்

குறைந்த விலையில் பல ரகங்கள்

மதராஸிலும் மற்ற ஜில்லாக்களிலும் உள்ள கூட்டுறவு சங்கக் கடைகளில் சரக்குகள் வெகு சீக்கிரம் விற்பனையாகின்றது. புதிய புதியதாய் அப்பொப்பொழுதுள்ள பாஷனுக்குத் தகுந்தபடி சரக்குகள் கடைகளுக்கு அனுப்பப்படுகின்றன. ஒரு சிரமமுமில்லாமல் உங்கள் தேவைக்கு சரியானவைகளை எங்களிடமிருக்கும் பலவித ரகங்களில் வாங்கிக்கொள்ளலாம்.

மதராஸ் கூட்டுறவு கைத்தறி துணிகள் வாங்குவதில், நீண்டகால உழைப்பு, கடைசிவரை அழகு, சோபை, அன்றாட உபயோகத்தின் நன்மை, இவைகளைத்தவிர நேராக உங்களுக்கு விற்கப்படுவதால், இதர வியாபாரிகள் லாபத்தைப் போக்கி, குறைந்த விலையில் கிடைப்பதை மறந்துவிடாதீர்கள்.

கைத்தறியிலிருந்து நேராக உங்களுக்குத்தான் வேஷ்டிகள் புடவைகள் சட்டைகள் டவல்கள் பிரின்ட்ஸ் சிங்கம்ஸ் சின்ட்ஸ் விடு அலங்கரிக்கத் துணிகள் மேஜை துணிகள் படுக்கை விரிப்புகள் கைக்குட்டைகள் லுங்கிகள் அங்கவஸ்திரங்கள் கொசுவலைகள் க்வில்ட்ஸ் தலையணிகள்.

மதராஸ் கோவாபரேடிவ் கைத்தறி ஜவுளிகள்

கட்டுப்பாடு விலைகளில் புதிய சரக்குகள்

மதராஸ் ஹான்லூம் வீவர்ஸ் புரொவின்ஷியல் கோவாபரேடிவ் ஸொஸைடி லிட்., 6-A, உட்ஸ் ரோட், மவுண்ட் ரோட், P. O.,
மதராஸ்.

சுபா

ஸ்ரீமதி ஜெயலக்ஷ்மி ஆர். ஸ்ரீநிவாசன்.

எழுத்தாளர்கள் நூறு ரூபாய் நோட்டுகளைக் கூடப் பார்த்தது கிடையாது என்று அடிக்கடி வ. ரா. அவர்கள் சொல்லுவார்கள். வறுமையோடு பிறந்தவர்கள்தான் எழுத்தாளராக வருகிறார்கள் என்ற முடிவுக்கு வந்திருந்தேன். ஆனால் எத்தனையோ ஆயிர ரூபாய் நோட்டுகளைப் பார்த்திருக்கிற எழுத்தாளர் ஸ்ரீமதி ஜெயலக்ஷ்மி ஆர். ஸ்ரீநிவாசன் அவர்களும் எழுத்தாளர் பதவியை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

ஸ்ரீமதி ஜெயலக்ஷ்மி ஆர். ஸ்ரீனிவாசன்

ஸ்ரீமதிக்கு எவ்வளவு பணம் இருந்தாலும் கதைகள் எழுதாவிடில் அவருக்குத் தூக்கம் வராதாம். சதா எழுதிக் கொண்டிருப்பார்களாம். ஸ்ரீமதி எழுதாத பத்திரிகைகளே கிடையாது. அவர் எழுதியிருக்கிற கதைகளையும் கணக்கிடமுடியாது. லக்ஷ்மி கடாக்ஷம் முதலிய கதைகள், நவமணிமாலை, புஷ்பஹாரம் (நாவல்), அழகுராணி (சிறு கதைத் தொகுதி), ராமச்சந்திரன், ருக்மணி முதலிய புத்தகங்களையெல்லாம் ஸ்ரீமதி எழுதியிருக்கிறார்கள். இவருக்கு ஹிந்தியும், கன்னடமும் தெரியும். இந்த பாஷைகளில் எவ்வளவோ கதைகள் எழுதியிருக்கிறார்கள். எவ்

வளவோ கதைகளைத் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார்கள்.

மைசூர் சமஸ்தானத்தில் நியாய மந்திரிப் பதவியை வகித்து, பிறகு ராஜபுதானாவில் பரத்பூர் சமஸ்தானத்தின் மாஜி திவான் ராஜ மந்திரபிரவீண ஸ்ரீமான் ஏ. பி. ராமநாதன் அவர்களின் அருமைப் புதல்வி இந்த அம்மாள். மைசூர் சிவில் சர்விஸை சேர்ந்த அடிஷனல் டைரெக்டர் ஸ்ரீமான் கே. ஸ்ரீநிவாசன் அவர்களுடைய தர்மபத்னி.

இவர்களுக்கு இரண்டு ஆண் குழந்தைகளும், இரண்டு பெண் குழந்தைகளும் இருக்கிறார்கள். இவர்களுடைய 17 வயது பெண்குமாரி லீலாவதி மைசூர் மகாராணி கலாசாலையில் பி. ஏ. வகுப்பில் முதன்மையாகத் தேறியிருக்கிறார்கள்.

ஸ்ரீமதிக்கு எழுத்தில் எவ்வளவு மோகமிருக்கிறதோ அவ்வளவு மோகம் வீட்டு வேலையிலுமுண்டு.

அதோடுவிடாமல் சமூக சீர்திருத்தம், சுகாதாரம், சமூக சேவை.......ஸ்திரீகள் சங்கம் நிறுவல் முதலியவைகளில் உழைத்து வருகிறார்கள்.

இப்படிப்பட்ட ஸ்ரீமதிகள் நம்ம ஊர்களில் இல்லையே என்றுதான் வருத்தமாக இருக்கிறது. இந்த அம்மாளாவது சென்னையில் இரண்டு மாதங்கள் தங்கியிருந்து அவர்களுடைய காற்று இங்கு அடிக்கும்படி செய்யக் கூடாதா?

[illegible]

என்ன பிழைப்பு!

பட்டாளத்துலே பக்குவமா சேர்ந்துக்கிட்டு
தொப்பியும் பூட்சும் சொகுசா போட்டுக்கிட்டு
ஆடிப்பாடி ஊர் ஊராய்த் திரிஞ்சுக்கிட்டு
ஆகாசத்துலே அலக்கா பறந்தாங்க—கடவுளே
பாட்டாளி மக்க(ள்) ஊருலே சோத்துக்கு
ஆலாப் பறக்குறுங்க கடவுளே!
(மச்சான் வருகை)
யுத்தம் வந்தாலும் வந்திச்சு எத்தனைபேரு ஊட்டுலே
சண்டையும் சச்சரவும் போட்டுக்கினு
சண்டைக்கு போனுங்க தெரியுமா, மச்சான்?
கால்குண்டு கட்டை வாங்க படைபடைக்கிற வெய்யல்லே
திரியப்போய் பொன்னுன உடம்பு வெந்து கரியாச்சுதே!
கால் கடுக்க நின்னு நின்னு கார்டு நீட்டி காசு குடுத்து
வாங்கியாந்த கட்டைவீணு வேகாமே போட்டுகிடக்குதே!
'பச்சை மரத்தை வெட்டி சாய்ச்சு
உன் முவரக்கட்டையைப் பாத்து குடுத்த
மவராசன் நல்லா இருப்பான்'னு
மனசு வெந்து வீராயி கை சொடக்குறு!
மண்ணெண்ணெய் ஊத்திபார்த்து கட்டை எரிக்க
வழிசெய்ய போய்க் கேட்டா 'ரேசன்'னு சொல்லி
உதட்டைப் பிதுக்குறுன் கோவமோ பெரிசா
பத்திக்கிட்டு வருது கட்டை மட்டும் பத்தல்லே!
கடைக்குக் கடை அமெரி துரையா இருக்குறுங்க
என்னகேளு 'இல்லே'ங்கிற பஞ்சப் பாட்டுதான்
என்னசாமான் இல்லேன்னு சொல்லிமுடிக்க நான் ஆவும்
இருக்கிறதைச் சொல்லிவிடலாம் பாக்கு வெட்டற
நேரத்துலே!

'ப்ளேட்' கிடேக்காமே சாமியார் ஆனுங்க ரொம்பபேரு
கையிலே சபமாலே ஒண்ணுதான் பாக்கி!
அதனுலே 'தாடி வச்ச எல்லாரும் தாகூர் இல்லே'ன்னு
தமாவு பேசி கைதட்டி சிரிச்சாங்க.
'ரேசன்' 'இல்லே' இந்த ரெண்டு வார்த்தை
கேட்டு கேட்டு காது புளிச்சு போச்சு.
புளிகூட இனிக்குதிப்போ அந்த
வவுத்தெரிச்சலே ஏன் கேக்குறே மச்சான்?
ரோட்டிலே சாக்குறதையா போகவும்
பயமாய் இருக்குது
'சுட்டுத் தள்ளிட்டா என்ன செய்ய?'ன்னு
மனசு கிடந்து அடிக்குது.
நீல மின்னும் சிவப்பு மின்னும் கனகாம்பரம் பூவாம்
'பூச்செடிகளே களேஞ்சு போட்டு பலதினுசு
விதைபோட்டு பயிர் செய்து பாருங்க'ன்னு
பஞ்சம் தீர வழி சொன்ருரு காந்திமகான்.
'கலிதீர்ந்தது'ன்னு நெனச்சவங்க ஏமாந்து போனுங்க
பொம்பளேங்க பூ சுமை சுமையா வைக்கத்தான்
செய்யருங்க

அவரைக்காயும்சுரைக்காயுமதோட்டத்திலே காணுமடா
ஏட்டுலே பார்த்ததுதான் மச்சான்!
யுத்தம் ஒருவழியா முடிஞ்சுதாம் பேப்பர்லே வந்திச்சு
நாம்படறபாட்டுக்கு முடிவு வந்திச்சா சொல்லு மச்சான்
கல்லு மண்ணு இல்லாமே அரிசி ஆறுபடி விக்குமா?
வீருயி கேக்குரு என்ன பதில் சொல்ல மச்சான்?
சண்டை முடிஞ்சு சமாதானம் ஆயிட்டா
பஞ்சம் பஞ்சா பறக்குமின்னுங்க
சொன்ன வார்த்தைக்குப் பஞ்சமில்லே
பஞ்சம் பறக்காமே ஆள் பறக்கிருங்க!
விமுற்றிப் போச்சுது பெரிய இடத்து விசயம்
கேப்பாரில்லே சொல்வாரில்லே
கரடி 'உர்' என்குதாம் சிங்கம் கர்ஜிக்குதாம்
நமக்கு என்ன புரியுது?
ஆறு வருசமா கடிபட்டு அரைசீவன் போயிடுச்சு
மீண்டும் யுத்தம் வந்தா அரைசீவனும் போயிடும்
எல்லாரும் போய்ட்டா இங்கே பிழைச்சுகிடந்து
இருப்பார் யாரு கடவுளுக்கு வெளிச்சம்

சும்மா குந்தியிருந்து 'கறுப்பு மார்க்கெட்'
பேரம் பண்ணி கொள்ளையடிச்ச புண்யவான்க(ள்)
காருலே குஷியா குளுகுளுன்னு காத்து வாங்க
நித்தம் நித்தம் பீச்சுக்கு போறுங்க!
நெத்திவேர்வை நிலத்துல விழ உழைச்சவங்க
கண்டதென்ன கேட்டதென்ன?
ஒண்ணும் சொல்ல பிடிக்கல்லே மச்சான்
ரவநேரம் வெளியே பூட்டு வா மச்சான்!

தோஷமற்ற, உயரிய, பூரிப்புள்ள
வைரங்கள்
அழகிய வேலைப்பாடமைந்த
பவுன் நகைகள்
நவீன முறைகளால் தயாரிக்கப்படும்
வெள்ளி சாமான்கள்
இவைகளுக்கு எங்களைக் கலந்து ஆலோசியுங்கள்
உம்மிடியார்
உம்மிடி ராமய்ய செட்டி, குருசாமி செட்டி கம்பனி
24/25, சைனு பஜார் : : மதருஸ்

✺ பீ.கே.முத்துசாமீ ✺

என்னை மன்னித்துவிடு

அண்ணுவிடமிருந்து அனுகுண்டு வேகத்தில் அந்தக் கடிதம் வந்தாலும், அன்பை அள்ளிக் கொண்டுதான் வந்தது.

எடுத்த எடுப்பிலேயே உள்ளத்தைத் திறந்து எழுதியிருந்தான்: "சென்ற கிருஸ்துமஸ் லீவிற்கே வருவாய் என்று எதிர்பார்த்தேன். என்னை நன்றாக ஏமாற்றிஞய். நீ வராதது எனக்கு எவ்வளவு வருத்தம் தெரியுமா? இந்தக் கோடை விடுமுறைக்காவது அவசியம் புறப்பட்டு வா. மன்னி, இந்தக் குடும்பத்திற்கு 'நேற்று' வந்தவள். நமக்குள்ள 25 வருட இரத்த பாசத்தை அவளது இடைக்கால விஜயம் ஒன்றும் செய்துவிடாது. கட்டாயம் வா."

இதைவிட இன்னும் என்ன எழுதவேண்டும்; நியாயமாக நான் போகத்தானே வேண்டும்; வருடத்தில் 10 மாதகாலம் ஹோட்டலில் சாப்பிட்டு அலுத்துப்போயிருக்கும் எனக்கு, திருப்பித் திருப்பி ஒரே பாடத்தை சொல்லிக் கொடுத்து மண்டையை வறட்சியாக்கிக்கொண்ட பள்ளிக்கூட வாத்தியாராக வாழும் எனக்கு இந்த 'அழைப்பு' வாஸ்தவமாக குதூகலமல்லவா கொடுக்க வேண்டும்?

ஆனல் நான் என்ன செய்கிறேன்? வந்த கடிதத்தை அர்த்தமின்றி மேலும் கீழும் ஆட்டிக்கொண்டு, சுருட்டி, மடக்கி நாதசுரம் வாசித்துக் கொண்டு என்னென்னமோ செய்கிறேனே—இதெல்லாம் என்ன கூத்து?

என்னைக் கேட்காதீர்கள். எனக்குப் பதில்சொல்லத் தெரியவில்லை. அதற்குப் பதிலாக என் உள்ளத்தை

வேண்டுமானல் கேளுங்கள். அது சொல்லும் அடியிற் கண்ட கதையை. ஆமாம், அது கதைபோலத்தான் நடந்தது!

அந்த எதிர்பாராத சம்பவம் இன்றைக்குச் சரியாக 1½ வருடங்களுக்கு முன்னல் நிகழ்ந்தது. என் உள்ளத்தில் அழிக்க முடியாதபடி எழுதி வைத்துக்கொண்டிருக்கிறேன்.

அது ஒருநாள் காலை ஈஸிசேரில் சாய்ந்துகொண்டு அரை வருட பரீக்ஷைப் பேப்பர் திருத்திக் கொண்டிருந்தேன். இருந்தாற்போலிருந்து வாசற்படியருகே "ஸார்!" என்ற ஒரு குரல் கேட்டது. அந்தக் குரலின் சொந்தக்காரிக்கு 7, அல்லது 8 வயது இருக்கும். குறு குறுப்பும், துடி துடிப்பும் அவள் முகத்தில் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தது. கையில் ஒரு ஆங்கிலப் பாடபுத்தகத்தை பிரித்து வைத்துக் கொண்டே "இதற்கு என்ன ஸார், அர்த்தம். எனக்குச் சொல்லித் தருவேளா? எங்கப் பாவுக்கு ஆபீஸுக்குப் போறதுக்கும், "ரேஷன்" கடைக்கு போறதுக்குமே நேரம் சரியாவா இருக்கு!" என்ருளே பார்க்கணும்!

இவ்வளவு கெட்டிக்காரத்தனமாக, தான் என்னிடம் வந்து அர்த்தம் கேட்டதற்கு பக்கபலமாக காரணத்தை தேடிவைத்துக்கொண்டு அவள் என்னிடம் பேசி ஏகாந்தத்தை குலைத்தது எனக்கு ரொம்பவும் பிடித்திருந்தது, 'உன் பேரு என்ன' என்று அன்புடன் கேட்டேன். அவள், "எம். சரஸா, 5ம் வகுப்பு, பி" என்று அடுத்தகேள்விகளும் சேர்த்து பதில் சொன்னுள். இந்தக்காலத்து பசங்களே இப்படித்தானிருக்கு என்று அந்தப் பர பரப்புக்கு விமர்சனம் செய்துவிட்டு அவளுக்கு அர்த்தம் சொல்லிக் கொடுத்தேன்.

அன்றைய பத்துநிமிட தொடர்பு பலமாகப் பிடித்துக் கொண்டது. சரஸா அடிக்கடி புத்தகமும் கையுமாக என்னிடம் குடு குடுவென்று ஓடி வந்து பாடங்களுக்கு அர்த்தங்களும் விநோதமான சந்தேகங்களும் கேட்டுப் போவது வழக்கமாகப் போய்விட்டது. இன்னும் கொஞ்ச நாட்களுக் கெல்லாம் இந்த சம்மந்தம் இறு

இப்போய், அவள் தகப்பனர் வரையில் அறிமுகம் ஆகி, அவளுக்கு டியூஷன் வாத்தியாராகி. அவள் வீட்டு நடுக் கூடம் வரை இழுத்துக்கொண்டும் போகப்பட்டேன்.

வழக்கம்போல ஒரு தினம் ட்யூஷனுக்குப் போயிருந் தேன். "சரஸா" உள்நுழைந்து எப்பவும் போலக் கூப் பிட்டேன். "இதோ வந்துட்டேன், ஸார்!" என்ற இழைந்தபிஞ்சுக்குரலுடன், இரட்டைப் பின்னலும் தலையு மாக குடு குடுவென்று சரஸா வோடிவரவேண்டியதற்குப் பதிலாக கலீர் கலீர் என்று கொலுசுவின் சப்தம் ஒலிக்க சரஸாவைவிட வயதில் பெரிய வேறொரு பெண்ணுருவம் தோன்றி என்னைத் திகைக்கவைத்தது.

என்னைப் பார்த்தவுடன் தன்னை அரை உடம்பாகக் குறுக்கிக்கொண்டு, அதில் அரை உடம்பை வாசற்படிக்கு அப்பால் மறைத்து வைத்துக்கொண்டு என்னோடு சங் கோஜத்துடன் பேசிற்று: "அவ டான்ஸ் கத்துக்கப் போயிருக்கா இதோ வந்துவிடுவா!"

இருக்கலாமா போய்விட்டு வரலாமா என்று யோசித்து ஒருமுடிவுக்குவராமல் அவளை ஒருதரம் நரஸ ுக் காப் பார்த்துவிட்டு, தலையைக் குனிந்துகொண்டேன். மறுபடியும் தலையை நிமிர்த்தியபோது என் பதிலை எதிர் பாராமல் டம்ளரில் காப்பி 'டக்' கென்று வந்து சேர்ந்தது. பையில் சரஸாவின் புத்தகங்கள் பொத்தென்று வந்து விழுந்தது. தலைக்கு மேலேயிருந்த மின்சார விசிறி விறு விறுவென்று சுழன்று என் கிருப்புமயிர்களை பிய்த்துக் கொண்டு போயிற்று.

இவ்வளவு உபசாரங்களும் எனக்கு ஏன் என்று ஆச் சர்யத்தால் திக்கு முக்காடியபோது அதற்குப்பதில் சொல் வதுபோல இரண்டு கண்கள் எனக்கு எதிரே காத்துக் கிடந்தன. அந்தப் பார்வையின் முழு அர்த்தத்தையும் நான் அனுபவிப்பதற்குள், "அக்கா! ட்யூஷன் வாத்தியார் வந்துட்டாரா?" என்று பரபரப்புடன் கேட்டுக்கொண்டே சரஸா குதித்தோடி வந்தாள். அதே சமயம் அந்த அக்கா என்னை ஒருதரம் குறிப்பிட்டுப் பார்த்துவிட்டு, வெட்கத் தால் சிவந்துபோன முகத்தைக் குவித்துக்கொண்டதைக் கண்டேன். அதற்கு என்ன அர்த்தம்?

மூன்று தினங்களுக்கு இராப்பகலாக அந்த அதிசய அக்காவின் அறிமுகம் என்னை உலுக்கி எடுத்தது. அவள் ஏன் என்னை அப்படிப் பார்க்க வேண்டும், அந்தப் பார்வைக்க என்ன அர்த்தம், ட்யூஷனுக்குப் போன இடத்தில் இது என்ன தாக்குதல்—என்று தவியாகத் தவித்தேன். கடைசியாக அந்த சந்திப்பு என்னை அரை அசடாக்கியது. இருந்தாலும் சரஸாவிற்கு ட்யூஷனுக்குப் போகும்போது, வரும்போது ரொம்ப ரொம்ப ஜாக்ரதையுடன் நடந்து கொண்டேன். ஆனல் அந்த இரண்டு பொல்லாத கண்கள் மட்டும் என்னை கண்காணிக்கத் தவறவில்லை.

நல்ல வேளையாக அதற்கு அடுத்தவாரம் எங்கள் அற்புத அவஸ்தைக்கு எதிர்பாராமல் முடிவு ஏற்பட்டது. சரஸாவின் தந்தைக்கு வேறு ஊருக்கு மாற்றலாகி குடும்பத்துடன் அவர் போய்ச் சேர்ந்தார். கடவுளின் கருணைக்கு என் இதயம் தன் நன்றிகளைச் செலுத்திற்று.

ஆறு மாதங்களுக்குப் பிறகு நாக்பூரில் என் அண்ணவிற்கு கல்யாணம் என்ற அழைப்பு வந்தது. துள்ளி எழுந்து பயணம் புறப்பட்டேன். கூட வந்த கடிதத்தில் எனக்கு வரப்போகிற மன்னி பி.ஏ. வரையில் படித்தவள் என்றும், சங்கீதத்தில் வாணி என்றும், கதை, கட்டுரைகள் எழுதத் தெரிந்தவள் என்றும் யோக்ய தாம்சங்கள் வர்ணிக்கப் பட்டிருந்ததை ஓடும் ரயிலில் படித்துக் கொண்டே போனபோது "ஆஹா! எப்பேர்பட்ட மன்னி" என்று குதூகலித்தேன்.

அண்ணவின் பரந்த சுபாவத்திற்கும். இந்த மன்னியின் வருகைக்கும் கன ஒற்றுமை; நான் போய் இறங்கியதும், இறங்காததும், அவன், அவளுக்கு தாலி கட்டப்பட்டதும் அவளது கரத்தைப் பிடித்து கரகரவென்று இழுத்துக்கொண்டு என் முன்னல் நிறுத்தி, "அம்பி! இதோ பார் உன் மன்னியை, எப்படி என் செலக்ஷன்?" என்று பெருமிதத்துடன் கேட்டாலும் கேட்பான். ஆமாம், அவன் அப்படிப்பட்டவன்! அதற்கெல்லாம் சரியான பதில் சொல்லி புதுதம்பதிகளைக் குலுங்கவைக்க வேண்டும் என்று திட்டம் போட்டுக்கொண்டே போனேன்.

போய் இறங்கினேன். எதிர்பார்த்தபடி என் அண்ணு, பரதனைப்பிரிந்த இராமனைப்போல என்னைப் பார்த்தவுடன் வாரி அணைத்துக்கொண்டு உள்ளே அழைத்துப்போனுன்.

பத்து நிமிடங்களுக்குப் பிறகு அவன் கொஞ்சங்கூட கூச்சமின்று கல்யாண வீட்டிற்கு சொல்லி அனுப்பி "புது மனைவி"யை வரவழைத்து எனக்குக் காண்பித்தான்.

மன்னியை நிமிர்ந்து பார்த்தேன். அவ்வளவுதான் நான் இருக்குமிடம், பூமியா, ஆகாயமா என்று புரியவில்லை. திகைப்பு, ஆச்சர்யம், படபடப்பு, என் உள்ளத்திலே பூகம்பமே ஏற்பட்டு விட்டதுபோன்ற ஒரு அதிர்ச்சி இவ்வளவும் ஏற்பட்டது.

என் ட்யூஷன் மாணவி சரஸாவின் சாக்ஷாத் சகோதரி எனது மன்னியாக எதிரே நின்று கொண்டிருந்தாள்!

அப்போது அவள் பார்த்தபார்வை......?

லீவு இல்லை என்று அபாண்டமாக அண்ணுவிடம் பொய் சொல்லிவிட்டு அன்று இரவே ரயில் ஏறியவன் தான்! அந்த அதிர்ச்சி இன்னும் குறையவில்லை. அதற்குப் பிறகு அண்ணுவிடமிருந்து வரும்படி எவ்வளவோ கடிதங்கள் வந்ததுண்டு. ஆனுல் என்மனம் ஏனோ போகஇடங் கொடுக்கவில்லை. அந்தக் குடும்ப நலனுக்கு நான் ஏதோவொரு பெரிய வேலி என்று நினைத்துக்கொண்டு அவஸ்தைப்பட்டேன். ஆனுல் கடைசியாக அண்ணுவிடமிருந்து வந்த கடிதத்தைப் பார்த்தபிறகு என்னுல் புறப்படாமல் இருக்க முடியவில்லை.

இதோ நாகபுரிக்கு என் சுமையுள்ள இருதயத்தை தூக்கிக்கொண்டு போகிறேன். "என்னை மன்னித்து விடு!" என்று முதலில் அண்ணுவை நமஸ்கரிப்பதா, அல்லது மன்னியை நமஸ்கரிப்பதா என்றுதான் புரியவில்லை!

ஸ்ரீ விஜயஸ்ரீ ஸ்ரீ

சாப நிவர்த்தி

விடுமுறையை எவ்வாறு கழிக்கலாம் என்று சிந்தனையில் ஆழ்ந்திருந்தபோது, மணியும் கிச்சாவும் வந்து சேர்ந்தார்கள்.

"ஏண்டா வி. சி. இந்த விடுமுறையில் தென்னிந்திய சரித்திரத்தில் கலங்கரை விளக்கங்களெனத் திகழும் ஊர்களையும் க்ஷேத்திரங்களையும் பார்த்து விட்டால் என்ன?" என்று கிறுக்குக்கிச்சா கேட்டான்.

"ஆமாண்டா ஸ்வாமி! அந்த ஐடியா பகு ஸ்ப்லெண்டிட்டா இருக்கு. அதுவுமில்லாமல் காபிடலாவுமிருக்கு," என்று ஆணித்தரமாகத் தலையில் அடித்துப் பேசினான் மணிப்பிரவாள மணி.

நல்ல யோசனையென்றே தோன்றியது. ஆகவே பிரயாணத்துக்கு ஏற்பாடுகள் செய்ய ஆரம்பித்தோம். துணைப்பிரயாணிகளாக எங்கள் மூவருக்கும் தெரிந்த சிலரி நபர்களைத் தேர்ந்தெடுத்தோம்.

பேரூர், வந்தவாசி, ஹம்பி முதலிய சரித்திர புராணீக சம்பந்தமான இடங்களுக்கெல்லாம் சென்றோம்; மகிழ்ந்தோம். ஆனல் அவ்விடங்களில் எல்லாம் நடந்த சம்பவங்கள் என் வாழ்க்கையில் முக்யத்வம் பெறவில்லை. அவைகளை மறந்தே போய்விட்டேன். ஆனல் சந்திரகிரியில் நடந்த சம்பவம்! வருடங்கள் பல சென்றுவிட்டன. ஆனல் அச்சம்பவம் மட்டும் என் மனத்திரையிலிருந்து விலகுவதாகக் காணேம்.

பலர் நான் சொல்லப்போகும் விஷயத்தை உண்மை என்று கருத மாட்டார்கள். கற்பனைபூர்தியில் மானசீக மாய்ச் சஞ்சரிக்கும் ஏழைக்கதாசிரியனின் மனக்குழப் பத்தில் பிறந்த கதை யென்றே சொல்லுவார்கள். நல்ல கற்பனை யென்று புகழ்ந்தாலும் புகழ்வார்கள். ஆனல் உண்மையில் நடந்த சம்பவம் என்றுமட்டும் அவர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அவ்வாறு எண்ணும் பேர் வழிகளுடைய வாழ்க்கையில் அத்தகைய சம்பவம் இடம் பெற்றிருக்குமானல் அவர்களும் என்னைப்போலவே பேசு வார்களென்பதில் சிறிதும் ஐயமில்லை.

* * * *

சுவர்ணரேகை ஊர்ந்து சென்று கொண்டிருந்தாள். எங்குமே குதூகலத்தைக் காணும். ஓயாமல் ஒழியா மல் ஒலமிட்டுக் கொண்டிருந்தன காட்டுப் பூச்சிகள். வாயு பகவானும் துக்கமே உருவெடுத்தாற் போன்று சலனமற்றுக் கிடந்தான். மரங்கள் தங்கள் இளந்தளிர் களை அசைத்து எங்களுக்கு நல்வரவு கூறவில்லை. அதிதி யிடம் அன்பில்லாத மனிதனே போன்று செயலற்றுக் கிடந்தன. நாங்கள் இருந்த தோணி நகர்வதே தெரியா மல் ஊர்ந்து கொண்டிருந்தது. பாரம் பொறுக்க முடி யாமல் கஷ்டப்படும் பிரயாணியைப் போல முனகிச் சல சலத்துச் சென்றது நதி. வானவெளியிலே ஒரு மேகத் தைக்கூடக் காணவில்லை. சூரியன் மேற்குத்திசையில் இறங்கிக் கொண்டிருந்தான். பட்சியினங்கள் காணப்பட வில்லை.

கூலியாள் பாட ஆரம்பித்துவிட்டான்;

"சற்றுன் முகஞ் சிவந்தால்—மனது சஞ்சல மாகு தடி;

நெற்றிச் சுருங்கக்கண்டால்—எனக்கு நெஞ்சம் பதைக்குதடி;

உன் கண்ணில் நீர்வழிந்தால்—என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி" என்று அபஸ்வரமாகக் கட்டைத் தொண் டையில் பாடிக்கொண்டே துடுப்பால் தண்ணீரை அலைத் தான். வேருெரு சமயமாக இருந்திருந்தால் நான் கட்டா

யம் சந்தோஷப்பட்டிருப்பேன். ஆனால் அப்பொழுதோ? என்னெஞ்சில் பாரமாக ஏதோவொன்று அமர்ந்திருந்தது. யோசனையில் ஆழ்ந்திருந்தேன்......அடிவானத்தின் முகம் சிவந்திருந்தது. மனதில் அமைதியில்லை. காரணமற்ற சஞ்சலம்.

சூரியாஸ்தமனத்தை உன்னிப்பாய்க் கவனித்துக் கொண்டிருந்த ராமு அடிவானத்துக்கருகில், யாவற்றையும் ரத்தக்களறியாகச் செய்துகொண்டு வானத்தைக் கிழித்துக்கொண்டு—கரும் பூதம்போல் கிளம்பிய ஒரு கட்டிடத்தைச் சுட்டிக் காட்டினான். நாங்களெல்லோரும் அவன் காட்டிய பொருளைப் பார்த்தோம். "அதுதானுங்க சந்திரகிரிக் கோட்டை," என்று கூறி விளக்கினான் கூலி.

சந்திரகிரிக்கோட்டை எங்கள் உள்ளங்களைக் கொள்ளை கொண்டுவிட்டது. தோணி கரை சேர்ந்தது. பிரமாண்டமான ஆலமரமொன்றின் வேரில் தோணியைக் கட்டிவிட்டுக் கூலியாள் எங்களைப்பின் தொடர்ந்தான்.

நாங்கள் சந்திரகிரிக்கோட்டைக்கு அருகில் வரும்போது உலகத்தை இருள் கவிய ஆரம்பித்து விட்டது. சற்று நேரத்தில் சந்திரனும் உதயமாகி விட்டான். சந்திரனொளியில், பூமியில் அமர்ந்திருக்கும் ராக்ஷஸனைப் போல் காட்சியளித்தது. கோட்டைத் தரையில் மதில் சுவர்களின் நிழல்கள் விழுவதும், ஆந்தைகள் அலறுவதும் அச்சத்தைக் கொடுக்கக்கூடியனவாக இருந்தன.

நிலவில் அமர்ந்து போஜனத்தை முடித்துக்கொண்டோம். பிறகு எங்கே படுத்துக்கொள்வது என்ற பிரச்னை எழுந்தது. நான் "ஏன், கோட்டைக்குள்ளேயே படுத்துக்கொள்வோம்" என்றேன். அதற்கு யாரும் சம்மதிக்கவில்லை. கோட்டையைக்கண்ட அவர்கள் பேதையுள்ளங்கள் பயத்தால் நிரம்பியிருந்தன. இதையறிந்தபோது எனக்குக்கோபம் வந்துவிட்டது. "நம் முன்னோர்களுடைய அருமைப் பெருமைகளைப் பற்றிப் பேசாமலே பேசி நமக்கு அறிவுறுத்தும் இக்கோட்டையைக் கண்டு ஏன் அஞ்சி நடுநடுங்கி அங்கலாய்க்கிறீர்கள்?" என்று ஒரு சிறு சொற்பொழிவு நிகழ்த்தினேன். அவர்கள் எதற்கும் செவி சாய்க்கவில்லை. போதாதற்குக் கிச்சா, "நாங்கள் யாரும்

இங்கு படுத்துக்கொள்ளப் போவதில்லை. நீ வேண்டு மானல் இரு. நாங்கள் போகிறோம்," என்று கூறி என் ஆத்திரத்தைக் கிளப்பிவிட்டான். "நீங்கள் எல்லோரும் பயங்காளிகள். நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். நானிங்கு தான் படுத்துக்கொள் ளப் போகிறேன்," என்று கூறிவிட்டேன். நண்பர்கள் "வேண்டாம்" என்று எவ்வளவோ சொல்லிப் பார்த் தார்கள். ஆனல் நான் பிடிவாதமாக இருந்துவிட்டேன். அலுத்துப்போய், காலையில் வந்து எழுப்புவதாகக் கூறி விட்டு வேறு எங்கோ படுக்கச் சென்று விட்டார்கள் அவர்களும்.

நான் ஒரு முட்டாள் காரியம் செய்துவிட்டேன். சந் திரகிரிக்கோட்டையில் தன்னந்தனியாய் படுத்துக்கொண் டேன். முட்டாள் காரியமாக இருப்பினும் அது ஒரு விதத்தில் எனக்குத் திருப்தியையே அளிக்கிறது. நான் அவ்விரவை அங்கு கழித்திராவிட்டால் என் பயங்கர அனு பவம் கிடைக்குமா ? அதைக்கூற முடியுமா ?

நான் எவ்வளவோ தைரியசாலிதான். இருந்தாலும் அவ்விரவு என்னையும் கலக்கிவிட்டது. அப்பொழுதுகூட நான் அவ்விரவுக்கு அவ்வளவு பயப்படவில்லை. இன்று அதைப்பற்றி யோசிக்கையில் மயிர் கூச்செரிகிறது. "எப்படித்தான் அந்த இரவை சந்திரகிரிக் கோட்டையில் கழித்தேனே ?" என்று எனக்கே ஆச்சரியமாக இருக் கிறது.

* * * *

ஜமுக்காளத்தை விரித்துக்கொண்டு படுத்தேன். தூக் கம் வரவேயில்லை. அப்புறமும் இப்புறமும் புரண்டு புரண்டு படுத்தேன். "தூக்கந்தான் வரவில்லை. கோட் டைக்குள் சென்று அங்கு இருக்கும் பொருள்களையாவது பார்ப்போம்," என்றெண்ணி டார்ச் விளக்கை எடுத்துக் கொண்டு கிளம்பினேன்.

கீழ்த்தளம் பூராவும் சுற்றிப் பார்த்தேன். பெரிய பெரிய காலி அறைகளாக இருந்தன. காலியென்று கூறி னேன். இல்லை, இல்லை, வெளவால்கள் கூட்டம் கூட்ட

மாக இருந்தன. அவைகளுடைய நாற்றம் வேறு. "மேல் தளத்தையும் பார்த்துவிடலாம்" என்ற யோசனையுடன் மேலே போனேன். அங்கு எல்லா அறைகளிலும் வௌவால்களைத் தவிர வேறொன்றுமே இல்லை. இன்னும் ஒரே ஒரு அறைதான் பாக்கி, அவ்வறைக்குள்ளும் நுழைந்து விட்டேன். மற்ற அறைகளைவிட அது சற்றுப் பெரியதாக இருந்தது. கதவுகள் இரும்பாலானவை. ஆனால் அவைகள் திறந்தே கிடந்தன.

சுவற்றின்மேல் டார்ச்விளக்கின் வெளிச்சத்தை வீசினேன். விளக்கினொளியைக் கண்ட வௌவால்கள் சிறு கூச்சலிட்ட வண்ணம் என் தலையைச்சுற்றிச் சுற்றிப்பறந்தன. எங்கிருந்தோ கோட்டானொன்று அலறியது. சற்று தூரத்திலிருந்த கிராமமொன்றிலிருந்து, கிழ நாயொன்று அழும் சத்தம் இரவின் நிசப்தத்தைக் குலைத்துக்கொண்டு, என் செவிகளில் ஒலித்தது. கண்கள் வெற்றுச் சுவரைப் பார்த்துப்பார்த்து அலுத்துப்போயின. ஆகவே கடைசி அறையிலும் நான் வெற்றுச் சுவரையே எதிர் பார்த்தேன். ஆனால் அங்கே எதிர்பாராதது நடந்தது. அவ்வறையின் சுவற்றிலிருந்து ஒரு பெரிய படம் தொங்கிக்கொண்டிருந்தது. பல நூற்றாண்டுகளாக கவனிப்பாரற்றுக் கிடந்த அப்படத்தை மறைத்துக்கொண்டு நின்றது எவ்வளவு தூசி.

அப்படத்தில் யார் சித்திரிக்கப்பட்டிருப்பார்கள் என்று கண்டுகொள்ள மனம் துடித்தது. ஆகவே ஒரு குதி குதித்துத் தூசியை ஊதினேன். கொஞ்சம் தூசி படத்தினின்று விலகியது. பல முறை அப்படியே குதித்துக் குதித்து ஊதினேன். கடைசியாக தூசி முற்றும் ஒருவாறாக விலகிவிட்டது, சந்திரன் மறைத்த முகில் மறைவதுபோல்.

எவ்வளவு அழகான படம்! அதை வரைந்த சைத்ரிகன் மிக்க சமார்த்தியசாலி என்றே தோன்றியது எனக்கு. நானே ஒரு சிறந்த சைத்ரிகன்—உண்மையில் வெறும் புகழ்ச்சியல்ல. இருப்பினும் என்னையே ஆச்சரியத்தில் ஆழ்த்திவிட்டது அப்படம். அதிலொரு இளநங்கை சித்தரிக்கப்பட்டிருந்தாள். யௌவனத்தின் சோபையை வர்ணமூலமாக அள்ளித்தெளித்திருந்தான் சைத்ரிகன்—

ஒவ்வொரு அங்கமும் பூரணப்பொலிவுடன் பிரகாசித்தது. முகத்தில் முறுவலின் சாயல். வேல் விழிகள். துடியிடை. ரோஜா புஷ்பம் போன்று தளதளக்கும் கன்னங்கள். கடைந்தெடுத்த எள்ளுப் பூ போன்ற நாசி, பிறையைப் பழிக்கும் நெற்றி.

படத்தைப் பார்த்துக்கொண்டே யிருந்துவிட்டேன். எங்கும் நிசப்தம். என் இதயத்துடிப்புடன் கையிலே கட்டியிருந்த கடியாரத்தின் 'டிக்டிக்' போட்டியிட்டது. என்னையுமறியாமல் கடிகாரத்தை நோக்கினேன். பன்னிரெண்டுக்கருகிலிருந்த சிறு முள்ளை நோக்கி வேகமாக நகர்ந்துகொண்டு இருந்தது பெரிய முள். என்னைக்கண்டு கடிகாரம் "முட்டாளே! இங்கே இருக்காதே வெளியே செல்" என்று கூறுவதுபோல் ஒரு பிரமை.

அறையின் இரும்புக்கதவு நகர்வது போல் பின்புறத்தில் சத்தம் கேட்டது. திடுக்கிட்டுத்திரும்பினேன். என்ன ஆச்சரியம்! கதவு மெதுவாகச் சாத்தப்பட்டது. ஆனல் சாற்றுபவர் யாரும் கண்ணுக்குப் புலப்படவில்லை. பயத்தால் உடம்பில் வியர்வை முத்து முத்தாக அரும்பியது. கத்த வாயெடுத்தேன். குரல் நெஞ்சிலேயே உறைந்து விட்டது.

என்னையுமறியாமல் கண்கள் மறுபடியும் படத்தை நாடின. என்ன! என்னை என் நேத்திரங்களே ஏமாற்றுகின்றனவா? இள நங்கையின் முகத்திலிருந்த புன்சிரிப்பைக் காணவில்லை. அதற்குப் பதில் அதரங்கள் துக்கத்தால் குவிந்திருந்தன. ஏளனம் துள்ளும் கண்களிலே கண்ணீர் தளும்பிக் கொண்டிருந்தது. கண்ணைக்கசக்கிக் கொண்டு பார்த்தேன். அதே காட்சிதான் தென்பட்டது.

திடீரென்று கோட்டை முழுவதும் அதிரும்படிக்கு வெற்றி முரசொலி கேட்டது. இளநங்கையின் படத்தைப் பார்த்துக்கொண்டிருந்த என் கண்கள் ஆச்சரியத்தால் மலர்ந்தன. சைத்ரிகனொருவனல் பல நூறுவருஷங்களுக்கு முன் வரையப்பட்ட அப்பெண்ணுருவில் அசைவு உண்டாயிற்று. கோரம்? அடுத்த நிமிஷம் அப்பெண் படத்திலிருந்து நெளிந்தவண்ணம் கீழே குதித்தாள். பயத்தால் நான் நடுநடுங்கிப்போனேன். அவள் நடந்து வரும்

பாதையிலிருந்து விலகிக்கொண்டேன். ஆனால் அவள் என்னைப்பார்த்ததாகவே தெரியவில்லை. தாமாகவே மூடிக் கொண்ட கதவுகள் தாமாகவே திறந்துகொண்டன. யாரும் திறக்கவில்லை! அப்பெண் அறையை விட்டு வெளியே ஓடினாள். என்னையும் மீறி என் கால்கள் அவள் சென்ற வழியே என்னை இழுத்துச் சென்றன. கைப் பிடிச் சுவற்றின்மேல் சாய்ந்து வெளியே எட்டிப்பார்த் தாள் அவள். நானும் எட்டிப்பார்த்தேன். ஒன்றுங் காணவில்லை. கும்பிருட்டாக இருந்தது.

மறுபடியும் காதைப்பிளக்கும்படியான வீரமுரசின் ஒலி, குதிரைக்குளம்புகளின் சத்தம். அவள் கைப்பிடிச் சுவற்றின்மேல் சாய்ந்தவண்ணம் வெளியே பார்த்துக் கொண்டிருந்தாள். என்னையும் மீறி நான் கீழ்தளத்துக்கு ஓடினேன். "ஏன்?" என்றெல்லாம் யாரும் கேட்கக் கூடாது. ஏதோ ஒரு சக்தியொன்று என்னை இழுத்துக் கொண்டு சென்றது.—அவ்வளவுதான். மீண்டும் கர்ண கடூரமாக ஒலித்தது முரசு. குளம்புகளின் சத்தம் நெருங்கி யது. இருட்டில் உன்னிப்பாய்க் கவனித்தேன். வெகு வேகமாகக் குதிரைவீரனொருவன் கோட்டையை நோக்கி வந்து கொண்டிருந்தான். நான் பயந்து ஒரு புத ரின் மறைவில் ஒதுங்கினேன். புதரினருகிலேயே குதிரை வீரனும் நின்றான்!

நான் அவனுடைய முகத்தைக் கவனித்தேன். அதைப்போன்ற அவலக்ஷணமான முகத்தை அதுவரை நான் பார்த்தது கிடையாது.

குதிரைவீரனும் என்னைப்பார்த்துவிட்டான். ஆகவே ஒளிந்திருப்பதில் பிரயோஜனமில்லை என்றறிந்து புதரி னின்று வெளியே வந்தேன். திடீரென்று எனக்கு அபார தைரியம் பிறந்துவிட்டது. மறுபடியும் எச்சரிக்கை, ஏன் என்று யாரும் கேட்கவேண்டாம். உண்மை எனக்கே தெரியாது.

"உன்பெயரென்ன?" என்று நான் தமிழில் கேட் டேன்.

"சசாங்கன்" என்று மறுமொழி அளித்தான் அவன் செந்தமிழில்.

அவனுடைய உடையை உற்று நோக்கினேன். சோழர்காலத்துப் போர்க்கவசம் பூண்டிருந்த அவனுடைய தேகம் வலுத்திருந்தது. இடையில் வாள். அவனுடைய முகத்தை நோக்கினேன். என்னையுமறியாமல், "ஏன் இவ்வளவு அவலக்ஷணமாக இருக்கிறது உன் முகம்? உன்னைக்கண்டால் எனக்கு இரக்கம் உண்டாகிறது," என்று என் வாய் பேசிவிட்டது.

"அப்படிப்பேசியதற்கு வந்தனம்," என்றான் சசாங்கன். மீண்டும் வீரமுரசு ஒலித்தது. மீண்டும் குதிரைக் குளம்புகளின் சத்தம். கத்தியை உருவினான் சசாங்கன். என்னைக்கொல்லத்தான் கத்தியை உறையினின்று எடுக்கிறான் என்றெண்ணி அச்சங்கொண்டேன். கோட்டையின் மேல்தளத்தை நோக்கிக் குதிரைவீரன் தலைநிமிர்ந்தது. அங்கு நான் படத்தில் கண்ட மங்கை யிருந்தாள். சசாங்கன் முகத்தில் புன்முறுவல். குளம்புகளின் சத்தம் நெருங்கிவிட்டது. மறு நிமிஷம் சசாங்கனின் தலையைக் காணோம்! மற்றொரு குதிரைவீரன் வெகு வேகமாக எதிர்திசையில் போய்க்கொண்டிருந்தான். அவனுடைய கையில் சசாங்கனின் தலை இருந்தது. கோட்டையின் கைப்பிடிச் சுவற்றில் சாய்ந்துகொண்டிருந்தபெண்ணையும் காணவில்லை!

தலையில்லாத அக்குதிரைவீரனை நோக்கினேன். அவனுடைய உடலும் கீழே விழுந்துவிடவில்லை. குதிரையின் மீதுதான் இருந்தது அது. கத்தியும் கையுமாக தலை யின்றி அவ்வாறிருந்த சரீரத்தைக்கண்ட நான் அவ்விடத்தை விட்டு ஓட முயற்சித்தேன்.

"நில்" என்று கட்டளை பிறந்தது அவ்விடத்திலிருந்து. என்னையும் மீறி நின்று விட்டேன். "என்னுடன் வா" என்று சொல்லி குதிரையினின்று எழுந்தது சசாங்கனுடைய முண்டம். குதிரையை ஒரு மரத்தில் கட்டிவிட்டு அது கோட்டையுனுள் நுழைந்தது. அதன் பின் நானும் சக்தியினால் கட்டுண்டவனைப்போல் சென்றுகொண்டிருந்தேன்.

இருவரும் கோட்டையின் மேல்தளத்தை அடைந்தோம். மங்கையின் படமிருந்த அறையை நெருங்கினோம்.

பூட்டப்பட்டிருந்த கதவுகள் தாமாகவே திறந்து அறை கொண்டன. அவைகளை யாரும் திறக்கவில்லை! இருவரும் யினுள் நுழைந்தோம்.

என்னைச்சுட்டி "இங்கே உட்கார்," என்றது உடலம். அதுகாட்டிய இடத்தில் நான் அமர்ந்து கொண்டேன். என் கண்கள் அந்த இளமங்கையின் படத்தை நோக்கின. அதில் புன் சிரிப்புடன் காட்சி யளித்தாள் அப்பெண்! அவளுடைய அங்கங்களில் அசைவு உண்டாயிற்று. மறு கணம் படத்தில் பெண்ணுருவைக் காணவில்லை. அதற்குப் பதில் வெண்மையான ஒளி பரவியிருந்தது.

என்னருகில் நின்றிருந்த உடல் காற்றில் மிதக்க ஆரம் பித்து மெதுவாகப் படத்தை அடைந்தது. என்ன ஆச் சரியம்! மறு நிமிஷம் உடலத்தைக்காணவில்லை. அதற் குப் பதில் ஒரு அழகிய யுவனுடையபடம் தோன்றியது பெண்ணின் சித்திரமிருந்தவிடத்தில். அவன் அங்கங்களில் அசைவு உண்டாயிற்று. பிறகு படத்திலிருந்து அவனும் மறைந்தான். திரும்பவும் வெண்மையான ஒளி!

* * * *

அவ்வறையில் நான் உட்கார்ந்து கொண்டிருந்தேன், பெண்ணின் படமிருந்த இடத்தைப்பார்த்த வண்ணம். எனக்கு அவ்வறையைவிட்டு எழுந்துசெல்லத் தோன்றா திருந்தது விந்தையிலும் மிக விந்தை—எனக்கே ஆச்சரிய மாய் இருக்கிறது நினைத்துப்பார்த்தால்.

படத்தில் தோன்றிய ஒளியைப் பார்த்துக்கொண்டே யிருந்தேன். திடீரென்று படத்தில் மங்கை தோன்றினாள். அவளுடைய பக்கத்தில் ஒரு அழகிய யுவனும் தோன்றி னான். ஒரு நிமிஷம் இருவரும் படத்திலிருந்தனர். பிறகு இருவரும் மறைந்துவிட்டார்கள். மறுபடியும் வெண்மை யான ஒளி!

இதற்கப்புறம் நடந்ததைத்தான் யாராலும் நம்பமுடி யாது. இதுவரை சிறிது நம்பி வந்தவர்கள்கூட இனி கட்டாயமாக நம்பமாட்டார்கள். நிமிஷங்கள் ஒன் றிரண்டு ஓடி மறைந்தன. வெண்மையான ஒளியையே

பார்த்துக்கொண்டிருந்தேன். யுவனுக்கும் யுவதிக்கும் பதில் நந்தவனமொன்று தோன்றியது. அந் நந்தவனத்தில் பளிங்குமேடை யொன்றில் சித்திரப்பெண் அமர்ந்திருந்தாள். உடலத்தினின்று யுவனுக மாறிய சசாங்கன் கையில் ஒரு யாழுடன் அவளை நெருங்கினன். மங்கை அவனைக்கண்டவுடன் சரேலென எழுந்திருந்து தலை குனிந்தாள். வாலிபன் பேசவாரம்பித்தான்: "சுவர்ண ரேகா! உன்னை நான் மனமாற நேசிக்கிறேன். ஆகவே உன்னை என் ராணியாக்கிக் கொள்ளப்போகிறேன்," என்ருன். அவள், "பிரபு! அது எப்படி முடியும்? நீங்கள் மகிதலம் புகழும் சசாங்க சக்கரவர்த்தி. நான் ஒரு ஏழைப் பெண்" என்று கூறினுள். "உனக்குப் பிரியமிருந்தால் நீ என் ராணி தான்." யுவதி பதில் பேசவில்லை. தலையசைத்தாள்.

அத்துடன் அப்படம் மறைந்தது. நான் சிந்தனையில் ஆழ்ந்துவிட்டேன். "சசாங்கஞ அந்த யுவன்? ஏன் அவனுடைய முகம் இப்போது அவ்வளவு கோரமாய் இருக்கிறது?" என்று என் மனத்துள் ஒரு கேள்வி எழுந்தது.

மற்ருெரு படம் தோன்றியது. சலனப்படங்கள் போலவே பாத்திரங்கள் பேசின......நோயாளி ஒருவனுடைய படுக்கையறை. முகத்தில் பெரிய கட்டுக்களுடன் சசாங்கன் படுத்திருக்கிருன். அவனருகில் சுவர்ண ரேகை நிற்கிருள் அழுதவண்ணம்.

மற்ருெரு படம். சசாங்கன் முகத்திலிருந்த கட்டுகள் அவிழ்க்கப்பட்டு முகம் பார்ப்பதற்கு வெகு விகாரமாய் இருக்கிறது. சுவர்ணரேகை அவனருகில் நின்று கொண்டு அழுகிருள். சசாங்கன் கூறுகிருன் "சுவர்ணரேகா! ஏன் அழுகிருய்? உன் கண்கள் சற்று சிவந்தாலும் என் மனம் சஞ்சலமாகின்றது. உன் கண்ணீரைக்கண்டால் நெஞ்சம் குமுறுகிறது. உன் கணவஞகிய நான் இறக்கவில்லையே, பிழைத்துத்தானே இருக்கிறேன். பின் ஏன் வருத்தப்படுகிருய் என் கண்ணே?" என்று. சுவர்ண ரேகை, "ஐயோ! உங்கள் முகம்!" என்று சொல்லித் தேம்புகிருள்.

2084 24

"சசாங்கனின் அழகிய முகம் விகாரமடைந்து விட்டது," என்று என் மனம் உளறிற்று. என் பயமெல்லாம் பறந்துபோய் விட்டது. உற்சாகத்துடன் படங்களைப்பார்க்க ஆரம்பித்துவிட்டேன்.

இன்னொரு படம் நந்தவனம். பளிங்குமேடையில் சுவர்ணரேகை அமர்ந்திருக்கிறாள். அங்குமிங்கும் பார்த்துக்கொண்டு ஒரு யுவன் வருகிறான். சுவர்ண ரேகையுடன் கூடி சரசசல்லாபம் செய்கிறான். திடீரென்று சசாங்கன் தோன்றுகின்றான். கண்களில் தீப்பொறி பறக்க, தன் உடைவாளை உருவி இளைஞனின் நெஞ்சைப் பிளக்கிறான். பிறகு சுவர்ணரேகையைப் பார்த்து, "அடி சண்டாளி! உன்னைக்காதலித்து மணம் செய்து கொண்டதன் விளைவு இது தானா? உனக்குச்சரியான தண்டனை விதிக்கின்றேன். சிறைவாசம் தான் உனக்குச் சரி," என்று கடுமையாக மொழிகிறான்.

அப்படம் மறைந்து வேறொன்று தோன்றியது: சந்திரகிரிக்கோட்டையில் ஓர் அறை. சுவர்ணரேகை படுத்துக்கொண்டிருக்கிறாள். அவளிடம் ஒரு தாதி வருகிறாள். "நீதான் என் மகனைக்காப்பாற்றி எனக்கேற்பட்ட சிறுமையைச் சசாங்கனைக் கொன்று தீர்க்கவேண்டும்," என்று கூறி அருகிலிருந்த மதலையைத் தாதி கையில் கொடுக்கிறாள் சுவர்ணரேகை.

மீண்டுமோர் படம்: தாதியின் மரணத்தறுவாய். அவள் படுக்கையருகில் ஒரு யுவன் நின்று கொண்டிருக்கிறான். அவள் பேசுகிறாள்—"அப்பா, நீ என் மகனல்ல. ராணி சுவர்ண ரேகையின் மகன். ஆனால் சசாங்க சக்ரவர்த்தியின் குமாரன் அல்ல. உன் தாயார் கள்ளக்காதலனுடன் களித்திருப்பதைக்கண்ட சசாங்கன் அவளை அளவற்ற துன்பத்திற்கு ஆளாக்கினான். அவளுடைய வேண்டுகோளின்படி சசாங்கனை நீ கொல்வதாக வாக்களிக்க வேண்டும்." யுவன் சற்று நேரம் யோசிக்கிறான். பிறகு, "விபசாரியாய் இருப்பினும் அவள் என் தாய். அவளுடைய சொல்லை ஒரு நாளும் தட்டவே மாட்டேன்" என்று கூறுகிறான்.

அப்படம் மறைந்து வேருென்று தோன்றியது. சுவர்ண ரேகையின் மகன் தவத்திலாழ்ந்திருக்கிருன். "கடுந்தவம் புரிந்து சசாங்கனுக்கு நல்ல பாடம் கற்பிக்கிறேன்," என்று முணுமுணுக்கிருன்.

கடைசி படம்: சந்திரகிரிக் கோட்டையின் வாயில். கடகடவென்று நகைத்தவண்ணம் கத்தியும் கையுமாக கவசமணிந்து, குதிரைமீது அமர்ந்திருக்கிருன் சசாங்கன். அடிக்கடி அவன் கோட்டையின் மேல்தளத்தை அண்ணாந்து பார்க்கிருன். "சுவர்ணரேகையை இப்பொழுது விடுதலை செய்வார்கள். கள்ளக்காதலன் மூலம் பெற்ற பிள்ளையின் ரத்தம் பூமியில் ஓடுவதைக்கண்டு அவள் நடு நடுங்கட்டும். அவனுக்குத்தான் என்ன தைரியம். 'என் தாயின் வாக்குப்படி உன் உயிரை இன்று புதுமாதிரியாகக்குடித்து உனக்கு என்றென்றைக்கும் மறக்காதபடி செய்கிறேன்' என்றல்லவா கூறினுன்?" என்று தனக்குத்தானே பேசிக்கொள்கிருன். அப்பொழுது சுவர்ண ரேகை மேல்தளத்தின் கைப்பிடிச்சுவரில் சாய்ந்தபடி வெளியே பார்த்துக்கொண்டிருக்கிருள்.

சசாங்கன் நிமிர்ந்து வெற்றியுடன் அவளைப் பார்க்கிருன். வீரமுரசு ஒலிக்கிறது. குதிரைக் குளம்புகளின் சத்தம். குதிரைமீது அமர்ந்தவண்ணம் ஒரு யுவன் தோன்றுகிருன். சசாங்கன் தன் கத்தியை உருவுவதற்குள் அவனுடைய தலை உருண்டோடுகிறது. யுவன் வெற்றி தோன்ற தலை இல்லா உடலத்தைக் காலால் உதைத்து, "என் தாயாரை வருத்தியதற்காக நீ இப்பொழுது தண்டனை அனுபவிக்கிருய். அவள் எப்படிக் கஷ்டப்பட்டாளோ அதற்கு மேலாகவே நீ கஷ்டப்படப் போகிருய். என் வெற்றிக்கு அறிகுறியாக இன்று நடந்த சம்பவம் தினமும், உலகம் உள்ளளவும் நடைபெறும். நீ தலையில்லாமல், உருவிய கத்தியுடன் சந்திரகிரியைத்தினம் வலம்வருவாய். உனக்குச் சரியான தண்டனை இதுதான்," என்று சாபம் கொடுக்கிருன்.

பிறகு மேல் தளத்தில் நின்றிருந்த சுவர்ணரேகையைப் பார்த்து, "அம்மா! உன் சொற்படி செய்துவிட்டேன். என்னை ஆசீர்வதி," என்று கூறுகிருன். சுவர்ணரேகை பதில் பேசவில்லை; கண்ணீர் வடிக்கிருள்.

தாயார் கண்ணீர்விடுவதைக்கண்ட யுவன், "ஏனம்மா அழுகிருய்?" என்று கேட்கிருன். "என்ன இருந்தாலும் கணவனல்லவா?" என்கிருள் சுவர்ணரேகை.

"அம்மா, பெண்புத்தி நிமிஷத்திற்கு நிமிஷம் நிறம் மாறும் பச்சோந்தியைப்போல் மாறுகிறது. அன்று சசாங்கனைக் கொல்லும்படி கூறிவிட்டு இன்று அதற்கு வருத்தப்படுகிருயே; விந்தை மிகவிந்தை," என்ருன் யுவன்.

"இருந்தாலும், தண்டனை கொடுமையானது," என்று மொழிகிருள் சுவர்ணரேகை.

"சரி, உன் இஷ்டப்படியே தண்டனையைக் குறைப்போம்," என்று கூறி, யுவன், "இன்று நடந்த இச் சம்பவம் உலகம் உள்ளளவும் நடைபெருது. இன்றிலிருந்து சரியாக—வருஷம், மாதம், நாள், மணி, நிமிஷம், கணம் கணக்காக—ஆண்டுகள் கழித்து பூலோகவாசி யொருவன் சசாங்கனைக் கண்டு மனமிரங்கும்படி நேரிடும். அப்பொழுது சாபவிமோசனம் உண்டாகும். அப்பூலோகவாசி நம் சரிதத்தைப் புதுவிதத்தில் அறிவான்," என்று சாபநிவர்த்திக்கு உரிய மார்க்கத்தையும் கூறுகிருன்......

கடைசி படமும் மறைந்தது. அதற்கு பிறகு வெண்மையான ஒளி. பிறகு சுவர்ணரேகையும், சசாங்கனும் படத்தில் தோன்றினர்கள். சசாங்கனுடைய உருவம் அசைய ஆரம்பித்தது; அப்புறம் மறைந்தது. சுவர்ண ரேகையின் படம் மட்டும் அசைவின்றி இருந்தது. அதையே பார்த்துக்கொண்டிருந்தேன்.

யாரோவந்து என்னைத் தொட்டதாக உணர்ந்து யாரென்று திரும்பிப் பார்த்தேன்—தலையில்லாச் சாசங்கன் உடல்தான்!

"உங்களாலேயே சாபம் நீங்கிற்று. என் சரிதத்தையும் அறிந்தீர்கள்: வந்தனம்," என்று சொல்லிக் கொண்டே என்னை அழைத்துக் கொண்டு கீழ்தளத்திற்கு வந்தான். தன் குதிரைமீது ஏறிக்கொண்டு, "இதுதான் கடைசி தடவை நான் பூலோகத்தில் சஞ்சரிப்பது. இனிமேல் இந்த உபத்திரவம் கிடையாது." என்று கூறினன்

வீரமுரசு ஒலித்தது. சசாங்கன் புறப்பட்டுவிட்டான். குதிரை அவனுடன் இருளில் பாய்ந்தது. குளம்புகளின் சத்தம் சிறிது சிறிதாகக் குறைந்து கொண்டே போயிற்று.

* * * *

காலையில் என்னை எழுப்ப வந்த மணி என்னைக் கேட்டகேள்வி என்னைத் திடுக்கிடச் செய்தது.

"ஏண்டா, சிவா! நேற்றிரவு வீரமுரசு விட்டுவிட்டு ஒலித்துக்கொண்டேயிருந்தது நீ கேட்டாயா?" என்று அவன் கேட்ட கேள்வி, நான் கனவு காணவில்லை என்பதை ஊர்ஜிதம் செய்தது. என் நண்பர்களிடம் நான் கண்ட விநோதங்களைக் கூறினேன். அவர்களில் ஒருவராவது நம்ப வேண்டுமே? அதுதான் கிடையாது. அதற்குப் பதிலாக அவர்கள் விழுந்து விழுந்து சிரித்தார்கள். பிறகு கோட்டையின் மேல் தளத்திற்குச்சென்று பார்த்தோம். அங்கு சித்திர மங்கையின் சித்திரப்படம் கீழே விழுந்து சுக்கு நூறாக உடைந்து கிடந்தது!

தி கோவாபரேடிவ் பயர் & ஜெனரல் இன்சூரன்ஸ் ஸொஸைடி லிமிடெட்

டெலிபோன் : **4361.** தந்தி : **கோப்பயர்**

எல்லா விதமான நெருப்பு இன்சூரன்ஸும்
பிடலிடி உத்திரவாத இன்சூரன்ஸும் செய்யப்படுகின்றன

தலைவர் :

ராவ்பகதூர் டி. எம். சின்னய்யா பிள்ளை எம்.ஏ., பி.எல்.

திறமையான நிர்வாகம்

உங்கள் சொத்தையும் பொருள்களையும் இன்சூர் செய்து
விட்டு கவலையற்று இருங்கள். குறைந்த கட்டணத்தில்
பிடலிடி பாண்டுகள் எடுத்துக் கொள்ளலாம்

விபரங்களுக்கு : **P. ஷண்முகம்,** பி.ஏ.,
காரியதரிசி, தபால் பெட்டி 1249,
ஜி.டி., சென்னை.

எம்.எஸ்.கமலா

ஸ்திரீகள் வேண்டும் உரிமைகள் யாவை?

நாடு என்றால் புருஷர்களாலேயே ஏற்படுவதல்ல. பெண்களும் அந்த நாட்டில் ஒரு பாகஸ்தர். முக்கியமாக அவர்களுக்கும் ஒரு பங்கு உண்டு. இன்று இருக்கும் உலகை நாம் மாற்றவேண்டுமானால்......மாற்ற வேண்டியதும் அவசியம்,—நம்மைச் சுற்றி இருக்கும் கஷ்டமான இடத்தை ஓர் புதிய சுகமயமான உலகமாக நாம் நிர்மாணிக்காமல் முடியாது. அப்படிச் செய்வதற்கு ஆண்களும் பெண்களும் சேர்ந்து எல்லாவித துறைகளிலும் ஒரே நோக்கத்தை உத்தேசித்துக் கடமைகளை ஏற்றுக் கொண்டு காரியங்களில் இறங்கவேண்டும்.

சமீபகாலத்திலிருந்து, அதாவது இரண்டாவது உலக யுத்தம் தொடங்கிய நாள் முதல் பெண்கள் வயல்களிலும், சேனைகளிலும், மரக்கலங்களிலும் ஆண்களுக்குச் சமமாகத் தாங்களும் சாமர்த்தியமாய் வேலைகளைச் செய்ய முடியுமென்று காண்பித்து விட்டனர். பொதுஜன சேவைகளிலும் பெண்கள் பின்தங்கி யிருக்கவில்லை.

சில நூற்றாண்டுகளுக்குமுன் பெண்கள் எத்தனையோ வித கஷ்டங்களுக் காளானார்கள். இப்பொழுதும் அவர்கள் கஷ்டங்கள் முழுவதும் அவர்களைவிட்டு அகலவில்லை. சரியான வழியில் எதைச் சாதிக்கவேண்டுமானாலும், நாட்டை முன்னேற்ற மடையச் செய்ய வேண்டுமானாலும், அந் நாட்டிலிருக்கும் பெண்கள் ஆண்களுடன் சமமாகத் தங்கள் வாழ்க்கையின் கஷ்ட நிஷ்டூரங்களை அனுபவித்துக் கொண்டு காரியத்தின் பாரத்தைத் தாங்கி நடக்க வேண்டும். மேலும், குறுகிய காலத்தில் பலவந்தமான முற்போக்கை நாம் விரும்பினால் நாம் இதரநாடுகளுக்குச் சமானமாய்—அவைகளுக்கு இணையாக நிற்க

வேண்டும். பெண்கள் ஒவ்வொருவரும் தேச முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டுத் தங்களாலாகவேண்டிய காரியங்களின் பொறுப்பை உணர்ந்து நடக்க வேண்டும். அப்படியென்றால் ஆண்களை எதிர்த்து நின்று அவர்களை மதியாமலிருப்பதல்ல.அவர்களுடன் சேர்ந்தே பாடுபடவேண்டும். அப்படிச் செய்யாவிடில் முன்னேற்றத்திற்கு உண்டாகும் தடங்கல், நிதானம் இப்பேர்ப்பட்ட தீங்குகளுக்குக் காரணமாவார்கள். அதனால்தான் பாரததேசத்தில் பெண்கள் தங்கள் பலஹீனத்திலிருந்து தங்களைத் தவிர்த்துக் கொள்ள முடியாமல் தத்தளிக்கின்றனர், அது அவர்களுக்குத் தொன்றுதொட்டுவந்த மாபெரும் மாசு. முன்பிருந்ததைப்போல் புனர் நிர்மாணக் காரியக்கிரமத்தில் பெண்களைத் திறம்பட உபயோகித்துக் கொள்ள வேண்டியது வெகு முக்கியம்.

சமீப காலம்வரையில் மேனாடுகளில்கூட பெண்ணை ஒரு பொருட்டாய் மதிக்கவில்லை. அவள் தன் தங்கைக்கோ சகோதரனுக்கோ அல்லது மைந்தனுக்கோ சம்பந்தப்பட்ட ஒரு ஜீவனாக மாத்திரமே கருதப்பட்டாள். அவள் வாழ்க்கை முழுவதையும் இவர்களில் யாருடனாவது இருந்து கடத்திக் கொண்டிருப்பாள். அவள் உரிமைக்கு இடமில்லாமல் இருந்தது. அவசரமான உரிமைகளுக்கும் உத்தேசங்களுக்கும் விளம்பரங்களுக்கும் இடமே இல்லை.

எவ்வளவோ நூற்றாண்டுகளாக பெண்கள் அன்பார்ந்த மகளாய், இல்லக்கிழத்தியாய், தாயாய் இருப்பதே அவர்கள் விதியாய் போதிக்கப்பட்டுவந்தனர். புராதன ஆசாரங்களிலிருந்து, கொள்கைகளிலிருந்து விடுபட்டு திடீரென்று வெளிவருவது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல.

ஐரோப்பாவில் ஸ்திரீகளின் கஷ்டங்களே, அவர்களை முன்னுக்குக் கொண்டுவந்து சில உரிமைகளுக்காக அவர்களைப் போரிடச் செய்து அவர்களுக்கு வேண்டிய உரிமைகளைப் பெறச்செய்தன. ஆண்களின் எதிர்ப்புகளும் மறுப்புகளும், அநியாய வாதங்களும் அவர்களுக்கு அற்புதமாகவே தோன்றின. ஆனால் எத்தனையோ கோரமான போராட்டங்கள் நடந்த பின்தான் பெண்களுக்கு

ஓட்டு உரிமை கிடைத்தது. பாரததேசத்தில் பெண்கள் அரசியல் போராட்டத்திற்குப்பின் இதைவிட அதிகமான உரிமைகளைப் பெற்றனர்.

ஆயிரக்கணக்கில் அரசியல் போராட்டத்தில் பங்கெடுத்துக்கொண்டு, புராதனக் கொள்கைகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு, பெண்கள் தாங்கள் எடுத்துக்கொண்ட விஷயங்களில் வெற்றியடைந்தனர். நம் ஆண்கள் மேனாட்டு ஆண்களைப்போல் நமக்குக் குறுக்கே நிற்காமல் நம் தேச சுதந்திரத்திற்காகத் தம் தாய்மார்களுடனும் மனைவிகளுடனும் சகோதரிகளுடனும் பெண்களுடனும் முயற்சிப்பதில் ஒரு கர்வம் கொண்டனர். இப்படி நடப்பதனால் பெண்கள் சுதந்திரம் பெற்று விட்டனர் என்று சொல்வதற்கில்லை.

சுதந்திரமார்க்கம் வெகு நீளமானது. சமூகம் சங்கம் என்பவை பெண்களுக்கு வெகுவாய் தடங்கலை ஏற்படுத்துவதிலேயே இன்னும் குறியாயிருக்கின்றன. பெண்கள் பணத்திலும் பதவியிலும் தங்கள் வாழ்க்கையைத் தாமே தயார் செய்து கொள்ளும் வரையில் அவர்கள் சுதந்திரர்கள் அல்லவென்றே கருத வேண்டும்.

எல்லாவித ஏற்பாடுகளும் அமைந்த அரசாங்கத்தில், பெண்களுக்கும், ஆண்களைப்போல் அவர்களுக்குச் சமமாக எல்லாவித உரிமைகளும் வேண்டும். இந்தப் பிரயத்தினங்கள் அமுலில் வரவேண்டுமாயின், இதுவரை இருக்கும் நாட்டை இன்னும் உயர்ந்த நிலைக்குக் கொண்டுவர, பெண்களுக்கு ஆண்களின் ஒற்றுமை அதிக முக்கியமானது. அரசியலில் சுதந்திரத்திற்காகப் போராடுகிறோம். புதிய உலகை அமைப்பதற்கு, வழிகாட்டியாய் இருக்கும் பெண்கள் அந்த உலகில் நியாயமான இடத்தை அடையாவிடில் புதிய உலகம் எப்படி ஏற்படும்? தற்காலம் சமூகத்தில் எத்தனையோவித துராசாரங்கள் தலையெடுப்பதற்குப் பணமில்லாத பலஹீனம்தான் காரணம். இத்துராசாரங்களை அடியோடு களைந்தெடுக்க வேண்டுமானால், பெண்களுக்குச் சொத்துரிமை கட்டு திட்டமாய் இல்லாத போது, அரசியலில் சமூக உரிமைகள் பெண்ணிற்கு என்ன மதிப்பை அளிக்கும்? நாகரீக உலகில் சுதந்திரத்தை

அளிப்பது, சில அவசர உரிமைகளுக்காகப் போராடு வதற்கு வேண்டிய உரிமைகளல்ல. இந்தப் போராட் டத்திற்குச் சொத்துரிமை, சுதந்திரம் அதி முக்கிய மானவை. ஜாதிமத வித்தியாச மில்லாமல், ஜாதிப் பிரச்னை யையே முக்கியமாகக் கருதாமல், அவர்களை அசந்தார்க ளாகக் கருதாமல், சாஸ்திரத்திற்குமுன் நாட்டு ஜனங்களை எல்லாம் சமமான நிலைக்குக் கொண்டுவரவேண்டும்.

பெண்கள் தங்கள் கஷ்டங்களை எதிர்த்து வெற்றி பெற வேண்டுமானல் இன்றையபெண்கள் எதிர்த்து நிற் கும்பெரிய சிறிய சர்ச்சைகளை சீர்திருத்திக் கொண்டு, பெண் தன் வாழ்க்கைப் படியின் பிரதியொரு விஷயத்தை யும் சர்ச்சை செய்யவேண்டியது அவசியம். வீட்டில் தங்கள்காரியங்களை சாதாரணமாய், அவ்வளவு முக்கியமாக எண்ணுவதில்லை. ஆனாலும் வீட்டு விஷயங்களை சரியான படி சீர்திருத்தாவிடில் ஆண்கள் வாழ்க்கை முழுவதும் கஷ்டமாகவும், அருவருப்பாகவும் நடைபெறுகிறது. வீட்டு விவகாரம் இதரவிஷயங்களைப் போலன்றி, அதிக கஷ்ட மானதே. இவ்விவகாரத்திற்குக் காரியக் கிரமங்கள் முக்கியமாய் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. எவ்வளவோ முன் யோசனை, சாதுரியம், திறமை எல்லாம் வேண்டி யிருக்கிறது. தன்னில்லத்தை நன்கு சீர்திருத்திக் கொள் ளும் ஒரு இல்லக்கிழத்திக்கு இப்பெரும் பொறுப்பு முழு தும் தெரிந்திருக்கவேண்டும். தன் பிரயத்தனத்திற்குப் புக ழில்லாவிடினும், நாளுக்கு நாள் வீட்டுவேலை முழுவதை யும் செய்யும் ஓர் அடிமையாக அவளை என்றைக்கும் நினைக்க முடியாது. பெண்ணாகப் பிறப்பதே பெண் இனத் திற்கு அனர்த்தத்தை விளைவிக்கிறது. எத்தனையோ விவ காரங்கள் இதனல் தடைபட்டுப்போகின்றன. கிரமமாக அரசியலில், சமூகத்தில், பெண்கள் ஆண்களுக்குச் சமான மாக எல்லாவித உரிமைகளையும் பெற்றிருக்க வேண்டும்.

ஏழைக் குடும்பங்களிலும் கீழ்தர வகுப்புகளிலும் தாங் களே உழைத்துச் சம்பாதிக்க பெண்களுக்கு அனுமதி உண்டு. அவர்கள் புருஷர்களுடன் தம் குடும்பரக்ஷணர்த் தம் கூலிவேலை செய்யவேண்டி யிருக்கிறது. இந்த நிலை யிலும் அவள் உண்மையாய் சுதந்திரமுடையவளல்ல. அவள் கணவன் எவ்வளவு சம்பாதித்தாலும் அதை செல

வழிப்பதில் அவனுக்கே உரிமை உண்டு. அவன் சம்பாதிக்கும் பணத்தில் உரிமையில்லாத அவன் கணவனுக்கே தான் சம்பாதிப்பதையும் சமர்ப்பிக்கவேண்டியிருக்கிறது. அவள் கூலி வேலைசெய்து தனிப்பட சம்பாதித்ததை அவளுடைய உரிமைப் பொருளாக எண்ணுவதற்கில்லை. ஒரு குடும்பம் முழுதும் சேர்ந்து உழைத்த கூலியின் ஒரு பாகமாக அது எண்ணப்படுகிறது. அம்மாதிரி கருதுவது தவறு. ஒரு பெண் எவ்வளவு சம்பாதித்தாலும், அது நியாயப்படி அவளுடையதே. அவள் விருப்பப்படி, அவள் சம்பாதித்ததை அவளே செலவழித்துக்கொள்ள வேண்டியது. ஆண்கள் செய்யும் பலவித வேலைகளை ஒரு பெண் செய்ய விரும்பமாட்டாள். வாழ்க்கை அரங்கத்தில் அவள், ஆணைவிட, உயர்தரப் பதவியில் இருக்கப் பிரயத்தனப்பட மாட்டாள். அவள் விரும்புவது சமமான நிலை. உரிமைகளுக்காக நாகரீக வனிதையைப் போல் வேலைகள் செய்ய அவகாசங்கள், தற்காலத்தில் அமுலில் இருக்கும் சாஸ்திரங்கள் அவளுக்கு வழிவிடுவதில்லை. அந்த சாஸ்திரங்களை மாற்றினலன்றி யாதும் நடவாது. சமமான உரிமைகள் கொடுப்பதாக பறைசாற்றிக் கொண்டு, மேடைகளிலேறி, பிரசங்கங்கள் செய்து விட்டதனல் உரிமைகள் பெற்றது போல் ஆகாது. வீட்டுவேலைகளுடன் வெளிவேலைகளையும் ஒரு பெண் பார்த்துக்கொள்ள வேண்டும். எந்தக் காரியங்களுக்கும் பயிற்சி முக்கியமாய் இருக்கவேண்டும். வெளிவேலைகளில் ஈடுபடும்போது வீட்டு வேலைகள் தானகை நடக்குமென்றும், அதைத் தான் திருத்தி அமைக்க வேண்டியதில்லை என்றும் நினைக்கக் கூடாது. சில முக்கியமான லாபங்களை உத்தேசித்தாகிலும் வீட்டின்மேலும், குழந்தைகளிடமும் லக்ஷ்யத்தையிழந்து அஜாக்கிரதையாக இருக்கக்கூடாது. வீடும் குழந்தைகளும்தான் தன் வாழ்க்கையின் நியதி என்றும் இருக்கக்கூடாது.

தற்காலத்தில் அமுலிலிருக்கும் சட்டங்களில் பெண்ணுக்கு ஒரு நீதி, ஆணுக்கு ஒரு நீதி என்ற வித்தியாசம் இருந்துவருகிறது. இந்தசட்டம் எவ்வளவோ அருவருக்கத்தக்கதாக இருப்பது மன்றி உரமற்றதாகவுமிருக்கிறது. எவ்வளவு சீக்கிரத்தில் இச்சட்டத்தை மாற்ற முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் இதை மாற்ற வேண்டும். நீதி சாஸ்திரங்களிலும், சித்தாந்தங்களிலும் இருக்கும் வித்தியாசம்

கள் வெகு ஆச்சர்யமானவை, அற்புதமானவையுங்கூட என்று சொல்லலாம். ஒரு பெண்ணிடம் எவ்விதமான சிறிய தவறுகாணப்படினும் போதும். உடனே அவள் சிறிதும் ஆலோசனை யில்லாமல் பாதாளத்தில் தள்ளப் பட்டு வெளியேற்றப்படுகிறாள். ஆனால் ஆண் எவனாகி னும், இந்த சட்டதிட்டங்களுக்கு மாறாக நடந்தால் உலகம் அதை ஒரு பொருட்டாக எண்ணுவதில்லை. மன் னிப்புக்காக அலைகிறது. இல்லாவிடில் மெள்ள மெள்ள வசவுச் சொற்களை ஏற்றுக்கொள்கிறான். எங்கு ஒரு பெண் சங்கடங்களுக்கும் அபசாரங்களுக்கும் ஆளாகி சமூகத் தினிடையிலிருந்து தள்ளப்படுகிறாளோ, அங்கு ஆண் நிச்சிந்தையாய் நடக்கிறான். இதையெல்லாம் அறவே ஒழியவேண்டும், ஆண் பெண் இருவரும் ஒரே நிலையில் இருந்து நடத்தவேண்டுமானால், இதரவிஷயங்களில் அவர் களுக்குள்ள மரியாதை, நிலைமை எல்லாம் சமமாக இருக்க வேண்டும்.

பாரததேசத்தில் இன்று விவாகங்கள் 'ரகரக'மாக நடைபெறுகின்றன. ஆனால் அவ்விவாகங்கள் தாய் தந்தையர்களால் தம் சந்தானங்களுக்கு நிச்சயித்துநடத்து பவை. விவாகம் செய்து கொள்ளும் மணமகன், மண மகள் இருவருக்கும் எவ்விதமான செல்வாக்கும் தங்கள் விவாகங்களில் அவர்களுக்கில்லை. அவர்கள் சொல் ஏற் றுக்கொள்ளப்படுவதில்லை. தாய் தந்தையர்கள் தங்கள் கடமையைப் பெண்ணின்பால் பிரயோகிப்பார்கள். கட மைக்குக் கீழ்ப்பட்டு நடக்கவேண்டியது அவள் விதி. வேறுவழியில்லாததுதான் இதற்குக் காரணம். சீர்திருத்த விவாகங்கள் செய்து கொள்பவர்களுக்கு அவர்களின் சம்மதத்தின்மேல்தான் விவாகம் நடக்கிறது. அவர்களை பலவந்தம் செய்ய முடியாது. விவாகம் என்பது பரஸ்பர சம்மதத்தினால் ஏற்பட்ட ஒரு 'கண்ட்ராக்டா'க இருக்க வேண்டும். ஒருவருடைய ஆக்ஞைக்குட்பட்டு நடக்கும் 'சிவில்' கண்ட்ராக்ட்டாக அரசாங்கம் அனுமதிக்க வேண்டும். சுப காரியங்கள் மணமக்களின் விருப்பத்தின் பிரகாரம் நடக்கவேண்டும். அப்படியானால் மணம் செய்துகொள்வது 'கண்ட்ராக்ட்டா'க இருக்கவேண்டு மென்றால், விவாகம் எந்த வயதில் நடக்கவேண்டு மென்ற கேள்வியும் எழலாம்.

விவாக ரத்து விஷயங்களில் இன்னும் பெரிய வாதப் பிரதிவாதங்கள் நடந்து வருகின்றன. மன்னிக்கத் தகாத பாபத்தைப் போல் பார்க்கின்றனர், விவாகரத்தை. மேல் நாட்டு ஜாதியினரிடம் அது அவ்வளவு அதிகமாக பழக்கத்தில் இருப்பினும், அதையும் பாபச் செயலாகவே கருதுகின்றனர். விவாகரத்து என்ற கொள்கையைக் கையாண்டு, ஒரு வீட்டை இரண்டு செய்வதென்ற அர்த்தமல்ல. ஆனால் விவாகம் செய்து கொண்டதனால் சுகமில்லாதபோது, அந்த அசுகத்தை அனாரோக்கியத்தாலோ, அல்லது கணவன் மனைவிகளின் அசம்வதத்தினாலோ திருப்தியில்லாமல் நாளுக்கு நாள், கஷ்டப்பட்டுக் கொண்டு இருவருக்கு மிடையில் சங்கடங்களை அதிகமாக்கிக் கொள்வதைவிட அந்த விவாகத்தை ரத்துசெய்து விடுவது மிகவும் நல்லது. இம்மாதிரி சூழ்நிலையில் மக்களை ஈன்று, அவர்கள் வாழ்க்கையையும் ஆனந்த மற்றதாய் செய்வது மன்றி ஆரோக்கியமற்ற நிலையிலும் வைப்பதைவிட, விவாகரத்தினால் ஏற்படும் நல்ல அவகாசத்தைக் கைவிடாமல் பற்றிக் கொண்டு வேதனையைத் துவம்சம் செய்தவர்கள் ஆகிறார்கள். விவாகரத்து சில ஷரத்துகளின் பிரகாரம், காதலர்களில் யார் ஒருவரின் இஷ்டத்தின்மீது நடப்பினும் பெண் சொத்துரிமை அவசியத்தை நிறைவேற்றிக் கொண்டு சந்தானங்களின் யோக க்ஷேமங்களைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும்.

பெண்படும் கஷ்டங்களில் எல்லாவற்றையும்விட சட்டங்களுக்குக் கீழ்படும் கஷ்டம்தான் அபரிமிதம். ஆஸ்தியை அனுபவிப்பதற்கு, சம்பாதிப்பதற்கு, ஜீவனம்சம் பெறுவதற்கு, ஆணுடன்கூட சமஉரிமை பெறுவதற்கு பெண்ணினத்திற்குத் தற்காலத்தில் இடமில்லை. இக்கஷ்டங்களைப் போக்கவேண்டும். சொத்துரிமை விஷயத்தில் ஆண்களுக்கிருக்கும் எல்லா உரிமைகளும் பெண்களுக்கும் உண்டாகவேண்டும்.

அரசியலில்கூட பெண்கள் பின்தங்கியிருக்கின்றனர். ஆனால் இப்போது பெண்கள் அதிகமாய் பொறுப்புள்ள ஸ்தானங்களை ஏற்று நிர்வகிக்கின்றனர். அரசியல் சச்சரவில் ஏறத்தாழ இங்கிலாந்தில் கஷ்டப் பட்டவர்கள் போலவே இங்கு கஷ்டப்பட்டனர். இப்பேர்ப்பட்ட

பெண்களின் முன்னேற்றத்திற்கு வேண்டிய அபிலாஷை களேயே முன்னுக்கு நடத்தவேண்டிய போராட்டம் உண்டு. பெண்கள் தங்களுக்கு வேண்டிய நியாயமான உரிமைகளை அடையக்கூடாதபோது அவர்களே எதிர்த்து நின்று, தங்கள் உரிமைகளை அடைவார்கள்.

நவீனயுகத்தில் இந்த எண்ணம்,வெகு பெயர்களிடம் பிரமையாகவும், புரட்சியைக் கிளப்பக்கூடியதாகவும், பெண்கள்வேண்டும் உரிமைகள் விசித்திரமாகவும் தோன்றலாம். தேசத்தில் நாற்புறங்களிலும் அபிப்பிராய பேதங்களும் ஏற்படலாம். விவகார நோக்கத்துடன் கூர்ந்து கவனித்தால் நம்மிடை இருந்து வரும் வேற்றுமை மாயமாய் மறைந்துவிடும். தேச நிர்மாணத்தில் பெண்கள் பங்குபெற ஆர்வமுள்ளவர்களாக இருப்பது, எல்லோரும் நன்கறிந்த விஷயம். அவர்களின் உற்சாகம், த்ருட நிச்சயம், சுதந்திர உணர்ச்சி இவைகள் எல்லாம் நம்மை நம் முடைய முடிவான நிலைக்குக் கொண்டு சேர்ப்பதும் அன்றி அவர்களின் இன்றியமையா சாமார்த்தியங்களை நன்கு புலப்படச்செய்கின்றன. புராதன நிர்ப்பந்தங் களைத்தகர்த்து, அடிமைத்திரையை விலக்கி தற்காலத்திற் கேற்றவாறு உபயோகித்துக்கொள்ள வேண்டும். பாரத தேசத்துப் பெண்களின் ஒற்றுமையான உரிமைகள் ஒன் ருகவேஇருக்க வேண்டும் நவீனகாலத்தில் நாகரீகப்பைத்தி யத்தினுல் ஏற்பட்ட ஒரு வெற்றியின் வெற்றியாய் இருக் கக் கூடாது. புனிதமான தூய்மையான சட்டதிட்டங்களி ஞல் இந்த உரிமைகளைப் புதியதாய் புத்துணர்ச்சியுடன் பெறவேண்டும். அகண்ட பாரததேசத்திற்குச் சுதந்திர உருவை அமைத்து, சீர்திருத்தங்கள் செய்து, பெண்களின் உரிமைகளை அவர்களுக்கு அளித்து, ஆணும் பெண்ணும் ஒரே மேடையில் ஏறி, ஒற்றுமையுடன் உழைத்துச் சுதந் திரம் பெற்ற அன்று அல்லவா, ஸ்திரீகள் வேண்டும் உரிமைகள் கிடைத்து உற்சாகமுடன் உவப்பாய் நிற்பாள், நமதன்னை பாரதமாதா.

(மூலம்: ஸ்ரீமதி கிருஷ்ண ஹுதி சிங்க்)

சரஸ்வதி ராமநாதன்

வேதனை நிறைந்த இருள்

ரமாவின் கணவர் படுக்கையில் படுத்துக்கொண்டு பேப்பர் படித்தவாறே நித்திராதேவியை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். வேலைக்காரன் கூட தூங்கப்போய் விட்டான். கீழே சமையலறையிலிருந்து வந்த கடாகடா சப்தம் ராமாவிற்குச் சலிப்பைக் கொடுத்தது. "சோம் பேறி ராமன் எதையாவது திறந்துவைத்திருப்பான்" என்று மனதிற்குள் அவனைச் சபித்தாள். சோம்பலா யிருந்தாலுங்கூட எழுந்திருக்கவேண்டி யிருந்தது. மெது வாக எழுந்திருந்து மாடிப்படியிறங்கி சமையலறைக்குள் சென்றாள். அங்கே இவள் வரவை எதிர்பார்ப்பதுபோல் கரும்பூனை உட்கார்ந்திருந்தது. தன் ஆத்திரத்தை எல்லாம் அதன் மேல் காட்டி அதைத் துரத்திவிட்டு அதுவந்த ஜன் னலை சாத்தினாள். திரும்பி மாடியேறுவதற்குள் டிராயிங் ரூம் கதவு மூடியிருக்கிறதா என்று பார்க்க வந்தவள் இன் னும் அங்கே லைட்டு எரிவதைப் பார்த்து ராமனைத் திட்டிய வாறே லைட்டை அணைக்கப்போனாள்.

வெளியே கேட்டு திறக்கும் சப்தமும் தெளிவற்ற காலடி சப்தமும் கேட்டது. அந்த வேளையில் யார் வருகி றார்கள் என்று யோசித்துக் கொண்டிருக்கும்போதே 'லேசாகக் கதவை யாரோ தட்டினார்கள். திறப்பதைத் தவிர வழியில்லை. சலிப்புற்ற குரலில், "யார் அங்கே?" என்றாள். பதில் இல்லை. ஆனால் மறுபடியும் லேசாகத் தட்டும் சப்தம் கேட்டது.

ரமா, யார் இப்படி பதில் பேசாமல் தட்டுகிறார்கள் என்று யோசித்துக்கொண்டே மெதுவாய் கதவை திறந் தாள். முழுவதும் திறக்கும் முன்பே வெளியிலிருந்து ஒரு வாலிபன் அவசரமாய் இடித்துப் புகுந்து உள்ளே வந்து

வாசற்கதவை தாழிட்டு விட்டு அதன்மேல் சாய்ந்து கொண்டு, "மன்னியுங்கள்" என்ருன்.

முன்பின் தெரியாத ஒரு வாலிபன் இப்படி உள்ளே நுழைந்து கதவை தாழிட்டத்தைக் கண்ட ரமா திடுக்கிட்டுக் கூச்சலிட முயன்ருள். ஆனல் பயத்தினுல் குரல் எழும்பவே யில்லை. அதற்குள் அவ்வாலிபன் இடது கையால் ஜேபிலிருக்கும் ஒரு பிஸ்தலை எடுத்து ரமாவின் முன் நீட்டிக்கொண்டே "சப்தம் போடாதீர்கள்" என்ருன், தற்காப்பிற்காக இவ்வாறு செய்யவேண்டி யிருக்கிறதே என்ற வருத்தத்தை தெரிவித்தது அவன் குரல். ஆனல் இதை எல்லாம் நுட்பமாக கவனிக்கவில்லை ரமா. ஏற்கனவே செயலற்று நின்றிருந்த அவள் முகம் பீதியால் வெளிறி விட்டது.

வீட்டின் உட்புறத்தைச் சுட்டிக்காட்டியவாறே வாலிபன் "அங்கே போகலாமா" என்று நடக்கலானுன். பயத்தினுல் நடுங்கிக்கொண்டே ரமாவும் பின் தொடர்ந்தாள்.

உள்ளே சென்று லைட்டைப் போட்டவுடன் அவ்வாலிபன் "பயப்படாதீர்கள் நானும் ஒரு இந்தியன்தான். தங்களுக்கு என்னுல் சிரமம் ஏற்பட்டதிற்கு மன்னிக்கவும். சில மணி நேரம் என்னைத் தங்கள் சகோதரனுக பாவித்துத் தங்க இடம் கொடுத்தீர்களானுல் தங்களை என் ஆயுள் பரியந்தம் மறக்க மாட்டேன்" என்று சொல்லும் பொழுதே நிஷ்களங்கமான அவன் முகத்தில் கருணையின் ரேகைகள் படர்ந்தன.

ரமாவிற்கு இப்பொழுதுதான் உயிர்வந்தது. அவளுடைய பயமும் கொஞ்சம் கொஞ்சமாய் தெளிய ஆரம்பித்தது. ஆனுல் இன்னமும் அவளுக்கு அவ்வாலிபன் பேரில் நம்பிக்கை உண்டாகவில்லை. மெதுவாக தலை நிமிர்ந்து அவனை உற்று நோக்கினுள்.

அவ்வாலிபனுக்கு இன்னும் மூச்சுவாங்கிக் கொண்டிருந்தது. அவன் வெகுதூரம் ஓடிவந்திருக்க வேண்டும். அவனுடைய விசாலமான நெற்றியில் வியர்வைத் துளிகள் அரும்பிக்கொண்டிருந்தன. நாகரீக வாலிபனுக காணப்

பட்டான். மெதுவான குரலில் ரமா, "தாங்கள் யார்?" என்றாள்.

தன் கூர்மையான விழிகளால் ரமாவைப் பார்த்துக் கொண்டே, "புரட்சிக்காரர்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள் அல்லவா? அவர்களில் நானும் ஒருவன். நாங்கள் இவ்வளவு நாள் ஜெயிலில் இருந்தோம். நேற்று எங்களை வேறு ஜெயிலுக்கு மாற்றினார்கள். வழியில் என் கூட்டாளிகள் என்னைத் தப்புவித்தார்கள். ஓடுவதற்கு இடமில்லாமல் திகைத்த பொழுது இங்கே வெளிச்சத்தைக் கண்டு உள்ளே நுழைந்தேன். இப்பொழுது வெளியில் தலை காண்பித்தால் போதும் பழயபடி 10, 20 வருஷம் நிச்சியம், நான் விடியற்காலை போய்விடுகிறேன்" என்றான்.

ரமா ஒன்றுமே பேசவில்லை. அவளுடைய மூளை வேலை செய்ய மறுத்துவிட்டது. அவன் கூறியதனைத்தையும் கேட்டாளே ஒழிய தெளிவாக புரிந்துகொள்ளவில்லை. தான் செய்வது சரியா, தப்பா என்றும் யோசிக்கவில்லை. மரணத்தின்றும் தப்பி ஓராத்மா தன் காலின் கீழ் சரணடைந்திருப்பது மட்டும் அவள் மனதில் பதிந்தது. தன் தப்பிதத்தாலோ அல்லது பயத்தாலோ அந்த ஆத்மா அழிந்துவிடக் கூடாது என்று நினைத்தாள். அவளையறியாமலேயே அவள் மனதில் அவ்வாலிபன்பேரில் வாஞ்சை எழுந்தது.

ரமா பேசாது யிருப்பதைப் பார்த்த யுவன் "நான் இங்கேயே உட்கார்ந்து யிருக்கட்டுமா?" என்றான்.

ரமா பெருமூச்சு விட்டாள். ஆனால் பதில் பேசவில்லை. மறுபடியும் அவன், "சகோதரி பயப்படாதீர்கள். நான் இங்கேயே உட்கார்ந்திருக்கிறேன். தாங்கள் போய் தூங்குங்கள்" என்றான்.

ரமா நடுங்கும் குரலில், "அவரைக் கேட்கட்டுமா?" இப்பொழுது தான் அவளுக்கு மாடியிலிருக்கும் தன் கணவரின் ஞாபகம் வந்தது. ஒரு விநாடி இருவரும் பேசவில்லை.

"சரி" என்றான் அந்த யுவன். பிறகு, "நான் என்னவோ ரொம்ப தைரியமாய் வந்துவிட்டேன். அவர் ஒரு

வேளை பயப்பட்டால் விஷயம் முற்றிவிடும் அல்லவா? நான் விடியற்காலை போய் விடுகிறேன். நான் போன பிறகு அவரிடம் சொல்லிவிடுங்கள்" என்றான்.

சில வினாடிகள் ரமா யோசித்தாள். அவன் கூறிய தும் சரியாகப்பட்டது. தான் பேசாதிருப்பதை தவிர வேறு வழியொன்றும் புலப்படவில்லை. சிறிது நேரம் கழித்து சம்மதத்திற்கு அறிகுறியாக தலையை அசைத்து விட்டு மாடிப்படி யேறத்தொடங்கினாள். பாதிப்படி யேறும்பொழுதே கீழே லைட் அணைந்துவிட்டது. பார மான மனத்துடன் தட்டு தடுமாறி படுக்கையறையை அடைந்தாள்.

ரமாவின் கணவர் இன்னும் பேப்பர் படிப்பதிலேயே மூழ்கியிருந்தார். காலடிச் சத்தம் கேட்டதும் பேப்பரி லிருந்து கண்களை எடுக்காமலேயே "வந்துவிட்டாயா?" என்றார்.

"உம்" என்று சலிப்புடனே கூறிவிட்டு போர் வையை இழுத்து போர்த்திக்கொண்டு தூங்க முயன்றாள்.

"அடடா பத்தரையாகி விட்டதே" என்று கூறிக் கொண்டே அவரும் லைட்டை அணைத்துவிட்டு படுத்துக் கொண்டார். சிறிது நேரத்திற்கெல்லாம் அவர் நித்திரா தேவியின் வசமாய் விட்டதிற்கறிகுறியாக லேசான குறட்டை சப்தம் கேட்டது. ரமாவால் தூங்க முடிய வில்லை. இருட்டில் தூங்காமல் படுத்துக்கொண்டிருக்க வும் முடியவில்லை. தாகம் எடுப்பதுபோல் தோன்றியதால் தண்ணீர் குடிக்க எழுந்திருந்தாள்.

மேஜையின் மேலிருந்த டிபனையும் பாலையும் பார்த்த வுடன் தான் இந்த அமர்க்களத்தில் தன் கணவனுக்கு அவற்றைக் கொடுக்க மறந்துவிட்டதை நினைத்து வருத்த மடைந்தாள். சட்டென்று அவள் மனதில் அவ்வாலிபன் களைப்படைந்த தோற்றம் நினைவிற்கு வந்தது. "பாவம் அவனுக்காவது கொடுப்போம்" என்று எண்ணி அவை களை எடுத்துக்கொண்டு கீழே யிறங்கி வந்து அந்த அறையி லிருந்த லைட்டைப் போட்டாள்.

அவ்வாலிபன் துப்பாக்கியை மார்போடு அணைத்த வாறே யோசனையில் ஆழ்ந்திருந்தவன் அவளைக் கண்டதும் திடுக்கிட்டு எழுந்து நின்றான்.

ரமா தான் கொண்டுவந்ததை மேஜையில் வைத்தாள். அவன் சந்தோஷத்துடன், "இவற்றிற்கு அவசியமே யில்லை. தாங்கள் எனக்காக ஏன் சிரமப் படுகிறீர்கள்? எனக்கும் பசிக்கும் ரொம்ப உறவு" என்று கூறியவாறே சிரிக்கலானான். அவன் கண்களில் விசுவாசம் மிளிர்ந்தது.

வெகு ஆவலுடன் அவற்றைத் தின்னும் அவனைப் பார்த்த ரமாவிற்கு மனமிளகியது. அவளை யறியாமல் அவள் கண்களில் நீர் தளும்பியது. மெல்ல சுவர்ப்புறம் திரும்பி கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"இன்னும் ஏதாவது வேண்டுமா? என்று கேட்ட அவள் குரல்களைத் திருந்த குழந்தையைப் பரிவுடன் வின வும் அன்னையின் குரல்போலிருந்தது.

"நாளைக்கு இத்துணிகளுடன் வெளியே போக முடியாது. ஏதாவது வேலைக்காரனுடைய பழைய உடை களும் 5, 6 ரூபாயும் கொடுத்தால் மிக உதவியாக யிருக் கும்" என்றான்.

சிறிது நேரம் யோசித்து விட்டு ரமா, "சரி அவர் ஐந்து மணிக்கு எழுந்து விடுவார். அதற்குள் போய்விட முடியுமா?" என்று கேட்டாள்.

வியாகூலமும் வேதனையும் நிறைந்த குரலில், "முடி யும், அப்பொழுது தெருவெல்லாம் நிச்சப்தமாய்த் தானே யிருக்கும்" என்றான் யுவன்.

ரமா மறுபடியும் இருட்டில் படியேறிச் சென்று படுத்துக்கொள்ளும் பொழுது மணி பன்னிரண்டடித்தது.

இப்பொழுது பயத்திற்குப் பதிலாக அவள் மனதில் சந்தேகம் குடிகொண்டது. இந்த நாடகத்தின் விசித்தர மான ஆரம்பத்தை விட முடிவு என்னவாகுமோ என்று நினைத்தாள். இது அவள் அமைதியை குலைத்தது. நாளை கணவர் என்ன சொல்வாரோ என்று ஒருபுறம், அந்த பரி தாபகரமான நிலையில் இருக்கும் வாலிபனின் நிலை யொரு

புறமாக அவள் மனதில் பெரிய போராட்டம் நடந்தன. அமைதியில்லாமல் புரண்டுகொண்டே யிருந்தவள் அப்படியே கண்ணயர்ந்து விட்டாள்.

மறுபடி அவள் திடுக்கிட்டு விழித்துப்பார்த்த பொழுது மணி 4-30 ஆகியிருந்தது. கீழே தன் வரவை எதிர்பார்த்திருக்கும் அவ்வாலிபனின் நினைவு வந்ததும் வாரிச்சுருட்டிக்கொண்டு எழுந்தாள்.

நல்லவேளை அவள் கணவர் இன்னும் தூங்கிகொண்டிருந்தார். வேலைக்காரனின் உடுப்பையும் இரண்டு ஐந்து ரூபாய் நோட்டுகளையும் எடுத்துக் கொண்டு கீழே வந்தாள்.

அவன் புறப்படுவதற்குத் தயாராக நின்றுகொண்டிருந்தான். ரமா கொண்டுவந்த உடைகளை வாங்கி ஒரு நிமிஷத்தில் தன் உருவத்தை மாற்றிக் கொண்டான். பிறகு பணத்தை எடுத்துக்கொண்டே,

"சகோதரி, தற்பொழுது தங்களுக்கு ஒரு பிரதியுபகாரமும் செய்யமுடியாத நிலையில் இருக்கிறேன். ஆனல் தங்களுக்கு என்ன நேர்ந்தாலும் நான் ஒரு சகோதரன் இருக்கிறேன் என்பதை மறந்துவிட வேண்டாம். தாங்கள் காட்டிய அன்பையும் பரிவையும் என் ஆயுள் பரியந்தம் மறக்கமாட்டேன். நான் இங்கு தங்கியதை தயவு செய்து வெளியிடாதீர்கள்" என்முன் இதை கூறும் பொழுதே அவன் கண்களில் நீர்ததும்பியது.

வெளியே காலை நேரத்தின் வெண்ணிறம் பரவிக் கொண்டிருந்தது. வேதனை நிறைந்த அந்த இருளானது கொஞ்சம் கொஞ்சமாய் மறைய ஆரம்பித்தது. தோட்டத்தில் பறவைகள் சப்திக்க ஆரம்பித்து விட்டன.

புரட்சிகார இந்த இளைஞன் கண்களில் நன்றியறிதலானது கண்ணீரை வரவழைத்தது.

மௌனமாய் அவன் ரமாவிற்கு நமஸ்காரம் செய்து அவள் பாததூளியை தன் சிரசில் வைத்துக்கொண்டான். அவனுடைய சூடான கண்ணீர் சில்லென்ற ரமாவின் பாதங்களை நனைத்தன. அவளையறியாமல் அவளுக்குத் துக்கம் பீறிட்டுக் கொண்டுவந்தது.

துக்கம் தொண்டையை அடைக்க, "சுகமாய் இரு சகோதரா" என்றாள். அதற்கு மேல் அவளால் பேச முடியவில்லை. அவனும் பேசாது படியிறங்கி வெளியே சென்றான். தெருவை சுத்தம் செய்ய வந்த தோட்டிக ளுடன் தோட்டியாய் ஒரு கணத்தில் மறைந்து விட்டான். ரமா அவன் சென்ற திக்கையே பார்த்துக்கொண்டிருந் தாள். முன் பின் தெரியாது ஓர் இரவு தங்கிச் சென்ற ஓர் ஆத்மாவின் மேல் ஏற்பட்ட சகோதர வாஞ்சையால் அவள் உள்ளம் உருகிக்கொண்டிருந்தது.

எவ்வளவு நேரம் நின்றிருந்தாளோ தெரியாது. அவள் கணவன் படி யிறங்கி வரும் சப்தம் கேட்டதும் தான் அவள் தன் உணர்வுபெற்றாள்.

வெளியே பத்திரிகை விற்கும் சிறுவர்கள் "புரட்சி கார அனிப் தப்பிவிட்டான். பிடித்துக் கொடுப்பவர் களுக்கு 1000 ரூபாய் இனம்"; என்று கூவியதை கேட்டு கொண்டே உள்ளே திரும்பிய ரமாவின் முகத்தில் முத லில் வெறுப்பும் பிறகு ஏளனமும் கலந்த சிரிப்பு தோன் றியது.

இந்த ஈரல் குலை கட்டி வியாதியை ஜம்மியின் "லிவர்க்யூர்" தான் நிச்சய மாக குணப்படுத்தும்.

ஜம்மி வெங்கடரமணய்யா & ஸன்ஸ்

மைலாபூர் :: :: மதருஸ்

கு. பஞ்சாபகேசன்

கதவும், படுதாவும், காற்றும்

உச்சி வெயில் மண்டையை உடைத்துக் கொண் டிருந்தது. கோடைகாலத்திலே இயல்பாக எனக்குக் குளிர்ச்சி ஸ்தலம் ஒன்றை நாடிச் செல்லும் வழக்கமுண்டு. ஆனல் இந்த வருஷம் காரியாலயத்திலே அநேகத் தொந் திரவுகள். ஆகவே நகரிலேயே தங்கும் படியான அவசிய மேற்பட்டது.

"ஞாயிற்றுக் கிழமையன்றைக்கு, வெய்ய வேளைக்கு எங்கே புறப்பட ஆயத்தம் பண்றேள்?" என்று கேட் டாள் மனைவி, மேல் உத்தரீயத்தை எடுத்த என்னைப் பார்த்து.

"நாளைக்குப் பத்திரிகை வெளியாகணுமல்லவா? போய்க் காரியங்களைக் கவனிக்கணும். இப்போ நீ என் னைத் தொந்தரவு பண்ணதே! என்றேன் நான், ஒரு முக் கியமான கடுதாசியைத் தேடிக் கொண்டே.

"ஏற்கனவே உங்களுக்கு உடம்பு சூடு ஜாஸ்தி. இப் படிப் படைபடைக்கிற வெய்யிலிலே குடைகூட இல்லா மல் போறேன்கறேளே, நீங்கள் மட்டுந்தானு ஆபீஸிலே? வேறு யாருமே கிடையாதா? ஆமாம், என்ன தேட றேள்?" என்று கேட்டாள் மனைவி.

"அவசரமான செய்தி யொன்றின் குறிப்பை அதிலே எழுதிவைத்திருந்தேன். நாளைக்குப் பத்திரிகை யிலே போட்டாகணும். கடைசியிலே என் நிலைமை ஒவ் வொரு சமயமும் இப்படித்தான் ஆயிடறது. வேலைத் தொந்தரவு என்னுடைய நிழல்தான். ஆமாண்டீ, எங்கேயா வது அதைப்பார்த்தாயா?"

"நீங்க என்னென்னமோ எழுதறேள்; புரியாத தெல்லாம் பேசறேள். ஒவ்வொண்ணுக்கும் நான் பொறுப்பாளியா என்ன? படிச்சவளா பார்த்துக் கல் யாணம் பண்ணின்டிருக்கணும் உங்க பத்திரிகை வேலைக்கு!" என்றாள் அவள்.

நான் சிரித்தேன். அவள் சொன்னது வாஸ்தவமோ இல்லையோ, நான் சிரித்தது வேறொரு விஷயத்தைப் பற்றி. அது மனைவி சொல்லியதை ஒட்டியதுதான் என்றும் சொல்லலாம். நல்ல வேளை. அவள் நான் சிரித்ததற்குக் காரணம் கேட்கவில்லை. கேட்டிருந்தாளானால் அவளுக் குப் புரியாது. சிரிப்பூட்டும் அந்த வேதாந்தத்தைச் சொல்லியாக வேண்டும்! 'ஆமாம், நீங்கள் பேசறது உங்க ளுக்குத் தான் புரியும்!' என்று ஒரே போடாகப் போட்டு விட்டிருப்பாள் அவள். ஆனால் சிரித்ததற்குக் காரணம் உங்களுக்குச் சொல்லியாக வேண்டுமல்லவா? வேதாந் தம் என்று நீங்கள் நான் சொல்லப்போவதை நினைத்தீர் களானால் கட்டாயம் என்மனசு வருந்தும். அதற்காக நீங்கள் எண்ணுவதைச் சுதந்திரமாகச் சொல்ல நான் அநுமதிக்கமாட்டேன் என்று எண்ணாதீர்கள். கலைஞன் மற்றவர்களுக்காக ஒரு விஷயத்தைச் சொல்லவோ, எழு தவோ, செய்யவோ மாட்டான். அவனது அவனது தான்!

போன ஞாயிற்றுக் கிழமை நடந்த விவகாரம். கூடத் தில் கட்டிலில் படுத்திருந்தேன். அப்பொழுது உண் டான ஒரு சப்தம் என் சிந்தனையைக் கிளப்பி விட்டது.

அடிக்கொருதடவை 'கிரீச் கிரீச்' என்ற சப்தம். வாசல் கதவுகள் அசையும் பொழுதுதான் அது உண்டாகி யது. என் காதுகளில் அந்தசப்தம் விழுந்த சமயம், யாரோ திறந்த கதவு வெளிவழியாக உள்ளே வரும் உணர்வு கூட ஏற்பட்டது.

"வாசலிலே யாரு?" என்று நான் நாலைந்து தரம் கேட்கவும் என் மனைவி வந்து பார்த்து விட்டு, "நன்னா யிருக்கு நீங்க பண்ற ஆர்ப்பாட்டம். யாரும் காணலை வாசல்லே! அட, அப்படித்தான் யாராவது வந்து எமை யாவது கொள்ளை யடிச்சுண்டு போனாலும் போகட்டுமே!

பாவம்! ஏழைபட்டவனாக இருப்பான்.........''என்றாள், இந்த மாதிரி அநேக தடவைகள் நடந்தாய் விட்டது. என்னால் பொறுக்க முடியவில்லை.

''ஏண்டி அதைச் சரியாத் தாழ்ப்பாள் போடலே போலிருக்கிறது, அதனாலேதான் அப்படி அடிச்சிக்கிறது! அதுமேலே ஒரு படுதாவையும் போட்டிருக்கே. காத்துலே படுதா அசையறபோது யாரோ உள்ளே வாராப்பலே இருக்கு. படுதாவை தூக்கி எறிஞ்சுட்டு, கதவைச் சரியாத் தாழ்ப்பாள்போட்டுட்டு வா! அப்பறந்தான் எனக்குத் தூக்கம் வரும் போலே இருக்கு!'' என்று இரைந்தேன் நான்.

அவள் விழுந்து விழுந்து சிரித்தாள். ''நாளுக்கு நாள் பித்து ஜாஸ்தியா போறதா உங்களுக்கு? உஷ்ண காலமாச்சே, குளுமையா இருக்கற மேன்னுட்டு படுதாவைப் போட்டிருக்கேன். காத்திலே கதவு அசைஞ்சா நான் என்ன பண்ணுவேனும்? எல்லாம் சரியாய்த்தான் தாழ்ப்பாள் போட்டிருக்கேன்!'' என்று சொல்லிவிட்டு 'படக்' கென்று உள்ளே போய்விட்டாள் அவள்.

அவள் மட்டும் சிரிக்கவில்லை. இப்பொழுது நீங்களுந்தான் சிரிக்கிறீர்கள். இல்லையா?

என் நிலையில் நீங்கள் இருந்தீர்களானால் உங்களுக்குத் தெரிய வந்திருக்கும் அந்தக் கஷ்டம். அதைக் கஷ்டம் என்று சாதாரணமாகச் சொல்லக்கூட எனக்கு இஷ்டம் கிடையாது; உள்ளத்தையும் உடலையும் வதக் கிளடுத்த தொந்திரவு என்றுதான் அதைச் சொல்ல வேண்டும்.

மனைவிக்கு அந்தக் கஷ்டத்தின் உள் அர்த்தத்தைச் சொல்ல வாரம்பித்திருந்தேனானால் அவளுக்கு அது அர்த்தமாகாது ஆகவே பேசாமலிருந்தேன். ஆனால் திருப்பித் திருப்பி ரொம்ப அதிசயத் தொந்திரவு கொடுத்துக் கொண்டிருந்தன கதவும், படுதாவும், காற்றும்! கேளுங்கள்.

ஒவ்வொரு தடவையும் இந்த மூன்றும்-கதவு, படுதா, காற்று இம் மூன்று-ஒரே நாடகத்தை என் மனதிற்கு முன் நடித்த ஞாயிற்றுக் கிழமையிலே, சிறிது நேரத்திற்

குள்ளாகத் திருப்பி அதே மாதிரியாக அவை நாடகம் நடித்தன.

கதவு நீட்டி முழக்கிக் கொண்டு ஒரு முறை முணு முணுகிற்று: " ஒரே சமயத்தில் என்னை இரண்டு பேர்கள் தாக்குகிறார்கள். ஒன்று பெரும் பாரமாக என் மேலே வீற்றிருக்கும் இந்தப் படுதா. இரண்டாவது நன்றாகத் தாழ்ப்பாள் போடப் படும் என்னைத் தள்ளித் தள்ளி விடும் இந்தப் பொல்லாக் காறறு......," என்று அது வெகு உருக்கமாகப் போச வாரம்பித்தது.

கதவு ரொம்ப அழகாக, அதனால் மிகவும் கொஞ்ச மாக அசைந்தது. அப்பொழுது படுதா—நடுவிலே அழ கிய பூப் போடப்பட்டிருந்த அந்த 'ரோஸ் கலர்' பட்டுப் படுதா—வெகு ஒய்யாரமாக ஆடிற்று. நட்ட நடுவிலே, கமலக் கண்களைச் சிமிட்டிக் கொண்டு அது பேசவாரம் பித்தது: "கதவே! நல்ல கதையைப் படிக்கிறாய் நீ! நானா உனக்குப் பாரம்? மிக அழகாக இருக்கும் நான் உன்மேலே போடப் பட்டிருப்பது உனக்கே அழகல்லவா? தவிர, போன வருஷம் இந்த வீட்டு அம்மாள் என்னை வாங்கியபோது, "இதிலே கனங் கிடையாது; மெல் லிசா கைக்கும் கண்ணுக்கும் பூப் போலே இருக்கு" என்று எப்படி விரும்பி வாங்கினாள் தெரியுமா? ஏ கதவே உனக்கு இன்னொரு விஷயம் தெரியாதா! உள்ளே பட் டுப் படுக்கை அதன் மேலே என்னை விரிக்க வில்லை என்று ரொம்பவும் கோபித்துக் கொள்கிறதாம். அடிக்கடி அந்த அம்மாள், 'படுக்கையிலே என்னமோ குத்தறது,' என்று சொல்லிக் கொண்டே யிருக்கிறாள். இத்தனை மகத்துவம் வாய்ந்த என்னை, ஒரு பாரம் என்கிறாயே, உன்னைப் பரம முட்டாள் என்றுதான் சொல்ல வேண் டும்!'' என்று வெகு ஜம்பமாகப் பேசியது, மெல்லிய படுதா.

கதவுக்குப் பொறுக்க வில்லை. அது மறுபடியும், ஆனால் கொஞ்சம் வேகமாக, ஆடியது. அது சொல்லிற்று, 'எதற் கெடுத்தாலும் 'அந்த அம்மாள், அந்த அம்மாள்' என்று அடித்துக் கொள்கிறாயே, அந்த அம்மாளுடைய கொடுமையை உனக்குச் சொன்னேனானால் நீ நம்ப மாட்

டாய். ஆம், நம்பவே மாட்டாய்! ஏனென்ருல் சாயங் காலமாகி விட்டால் அந்த அம்மாள் உன்னை அழகாக மடித்துப் பத்திரமாகப் பெட்டியில் வைத்து விடுகிரு ளல்லவா? ஆனல் எனக்கு அவள் கொடுக்கிற கஷ்டம்—அப்பப்பா, கொஞ்ச நஞ்சமல்ல! தபால்காரன் வேலை எவ்வளவு சுலபம் என்கிருய்! சுயேச்சையாகக் காற்று வாங்கிக்கொண்டு வருகிருன்; 'தபால்' என்கிருன். அவனுடைய குரல் அம்மாள் காதில் விழுந்ததோ, இல்லையோ, அவள் சமையல் கட்டிலிருந்து ஒரே தாவாய்த் தாவி வாசலில் வந்து குதிக்கிருள். என்னை அவசர அவசரமாகத் திறந்து சுவற்றுப் பக்கம் தள்ளுகிருள்! அப்பா! 'படீ லென்று' சுவரில் மோதும் போது எனக்கு உண்டாகும் வேதனையும் பாவம், அந்த வெள்ளைச் சுவருக்கு உண்டாகும் வேதனையும் சொல்லி முடியாது. கடிதத்தை வாங்கி விட்ட பிறகுங் கூட அவள் என்னை இரக்க மில்லாமல் படீ லென்று சாத்தித் தாழ்ப்பாள் போட்டு விட்டு அலக்ஷ்ய மாகப்போய் விடுகிருள். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்கள் கொஞ்சமா? அநேகம்!'' என்று பெரு மூச்செறிந்தது கதவு.

படுதா பேசவாரம் பிப்பதற்குள்ளாக இத்தனை நேரமும் !சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டிருந்த காற்று பேசவாரம்பித்தது. ''என்ன இருந்தாலும் கதவு சொல் வதிலே உண்மை இருக்கவே இருக்கிறது. பாவம்! சுவற்றிலே மோதி மோதி அதற்குப் பலமெல்லாம் போய்விட்டது. அதனல்தான் நான் மிக மெதுவாக வீசிக்கொண்டு வந்தாலும்கூட அது அசைகிறது. பொழுதை யெல்லாம் அழகு செய்து கொள்வதிலேயே கழித்து விட்ட இந்தப் பட்டுப் படுதாவுக்கு மூளை குழம்பி விட்டது போலும்...,'' என்று காற்று பேசிக் கொண்டு வரும்போதே இடை மறித்தது பட்டுப் படுதா.

''என்ன உளறுகிருய்?'' என்று வளைந்து வளைந்து துடித்தது அது.

காற்று அலக்ஷ்யமாகச் சிரித்து, ''நேற்றுப் பிறந்த படுதாவாகிய நீ, என்னைப் பயமுறுத்துகிருய். உன் மிரட்டல் பாச்சா வெல்லாம் இங்கே பலிக்காது, தெரியுமா?

கேளம்மா. உலகத்திலே மனுஷ்யர்களுக்குள்ளே விசேஷ முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறதாம். அவர்களை யெல்லாம் சுற்றிக் கொண்டிருக்கும் எனக்கு அவர்கள் பேசுவது எல்லாம் தெரியாதா என்ன? ஆண்கள் பிரமாத விற்பன்னர்களாகிறார்கள், பெண்கள் புஸ்தகங்களுக்குள்ளே முகத்தை மறைத்துக்கொண்டு எழுத்து விஷயங்களை யெல்லாம் மண்டையில் ஏற்றிக்கொள்ளுகிறார்களாம். படிச்சவன் படிச்சவளைக் கல்யாணம் செய்து கொள்ள ஆசைப் படுகிறான்; செய்யவும் செய்கிறான்......," என்று காற்று பேசிக் கொண்டு வந்தபோது கதவு இடி இடி என்று சிரித்தது.

"என்னமோ எனக்குப் பரிஞ்சு பேச வருகிறாயே என்று பார்த்தேன். பரிஞ்சுபேச வருகிற அழகிலே பொய்க்கலப்பு கூடவா? படிச்சவன் படிச்சவளைக் கல்யாணம் செய்து கொள்ள ஆசைப் படுகிறான் என்றாயே, இந்த வீட்டு ஐயா அப்படித்தானே? அந்த அம்மாள் சுத்த மக்கு அல்லவா? மாச ஆரம்பத்திலே தப்புப் பால் கணக்குப் போடும் அம்மாளை, ஐயா எப்படிக் கோபித்துக் கொள்கிறார் தெரியுமா? ஆனால் அவ்வளவும் அந்த அம்மாளுக்கு வேண்டும்தான்!" என்றது கதவு.

"காலம் நல்லத்திற்கு இல்லையப்பா! சொல்ல வருவதற்குள்ளாக, கதவே, நீ அவசரப் படுகிறாயே! உன்னை இந்தப் படுதா, 'முட்டாள்' என்று சொல்லி விட்டதே, அதற்குப் பதிலாக உள்ளே கட்டிலில் படுத்திருக்கிறாரே அவரை அது முட்டாள் என்று சொல்லியிருக்க வேண்டும்......," என்றது காற்று.

"என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்ட படுதா கோபத்தில் சிவந்து காணப்பட்டது.

காற்று, "உன் கோபம் என்னை என்ன செய்து விடும்? ஒரு புயல் காற்றிலே உன் நளினத்துக்கு உயிர் இருக்குமா,படுதாவே? பொறுமையாகக் கேள். உள்ளே உட்கார்ந்திருக்கிறாரே, அந்த மாஹானுபாவர் பெரிய கலைஞர்—அதாவது எழுத்தாளர்—அதாவது வாழ்க்கைச் சித்திரக்காரர், மறு மலர்ச்சி விரும்புகிறவர்; 'முன்னேற்

றம் முன்னேற்றமென' சதா முணுமுணுத்துக் கொண்டிருப்பவர்; படித்தவர்; அறிவாளி. ஆனல் அந்த அம்மாவோ—கதவு சொன்னபடி—சுத்தமக்கு......!'' காற்று இன்னும் முடிக்க வில்லை. அதற்குள் சீறிக் கொண்டு கிளம்பியது அழகிய படுதா.

"அந்த அம்மாள் படிச்சவளாயில்லா விட்டாலும் நல்ல அழகி யில்லையா? அவளைப் போல அழகி யார் இருக்க முடியும்? அவள் அழகுக்கு ஆசைப் பட்டு அந்த மனுஷ்யர் அவளை விவாகம் செய்து கொண்டார், தெரியுமா?'' என்றது பட்டுப் படுதா.

காற்று சாந்தமாக வீசிக் கொண்டு பேசவாரம்பித்தது: "ஏ, பட்டுப்படுதாவே! நான் சொல்வதை நீ மௌனமாகக் கேட்டுக் கொண்டு வந்தால் சரி. இல்லாவிட்டால்......பார்த்துக் கொள்! மேலும் கேளுங்கள்: இந்த அம்மாள் அழகாகயிருக்கும்போதே அவர் மேலே எரிஞ்சு எரிஞ்சு விழுகிறுள்! கூடப் படிச்சவளா இருந்து விட்டாலோ, போதும், அவரை எழுதவாவது எண்ண வரவது விடவே மாட்டாள்! என்ன நான் சொல்வது புரிகிறதா? உலகத்திலே பெண்கள் படிக்கிறதெல்லாம் புருஷர்களை எதிர்ப்பதற்காகத்தான்; பெண்கள் அழகாக இருந்து விட்டால்கூட அவர்கள் புருஷர்களை எள்ளி நகையாடுகிறுர்கள். அடிக்கடி இந்த ஐயாகூடச் சொல்லுவாரல்லவா, 'எப்பொழுதடா இந்த சம்சார பந்தம் தீரும்' என்று? அதேமாதிரிதான் நளினமுள்ள பட்டுப் படுதாவின் பாரத்தையும் என் நண்பர் கதவு நினைக்கின்றுர். இல்லையா, கதவே?'' என்று கேட்டு மூச்சு விட்டது காற்று.

"ஆமாம்; ஆமாம்!'' என்றது கதவு.

"கிடையாது; இருக்கவே முடியாது; உண்மையே இல்லை! அழகை உதறித் தள்ள யாரால் முடியும்? ஏ, கதவே! உன்மேலே அழகாக இருந்துகொண்டு, உன்னைத் தழுவியபடி நான் இருக்கிறேனே, என்னை இரக்கமில்லாமல் 'பாரம்' என்கிறுயே? நீ உண்மையில் புளுகத்தான் செய்கிறுய். இல்லையா?'' என்று அலறியது பட்

டுப்படுதா. பாவம்! நிமிஷத்தில் அது வாடிப் போயிற்று!

கதவு பேசுமுன் காற்று மறுபடியும் பேசவாரம்பித்தது: "படிக்கிறவர்கள் முதலில் படிப்பையா உலகத்திலே கவனிக்கிருர்கள்? அழகைத்தான். படிப்பில்லாமல் அழகுள்ளவர்களுக்கு, அந்த அழகே செறுக்கூட்டுகிறது—இந்தப் பட்டுப் படுதாவைப்போல! படிப்பும் அழகும் சேர்ந்து விட்டதானல் கேட்க வேண்டியதேயில்லை! என்ன நான் சொல்வது?" என்று கதவைப் பார்த்துக் கேட்டது காற்று.

"ஆமாம்; ஆமாம்!" என்றது கதவு.

இந்த நாடகம் திரும்பித் திரும்பி அநேக முறைகள் நடந்தது. கடைசியில் அந்த அழகுராணிக்கு—பட்டுப் படுதாவுக்கு—பொறுக்க முடியவில்லை. அது காற்றிலே உந்தப்பட்டு கீழே சுருண்டு விழுந்தது. அத்துடன் நாடகம் நின்று விட்டது. கதவு செய்து கொண்டிருந்த சப்தம் தான் கொஞ்சம் கொஞ்சமாக வந்து கொண்டிருந்தது; உஷ்ணக் காற்றும் வீசியது. நான் நிம்மதி அடைந்தேன்.

மாலை—மணி ஐந்து இருக்கும். வாசலில் என்னுடைய அழகு ராணி இரைந்தாள்: "விலை கொடுத்து வாங்கின பொருளை யாராவது எடுத்துக் கொண்டு போயிருந்தால் என்ன செய்வது? பக்கத்திலேயே படுத்துக் கொண்டிருக்கும் உங்களுக்கு ஏது போனலுந்தான் தெரியாதே!" என்று கத்தினள்.

காற்றுதான் எனக்குப் பாடம் கற்றுக் கொடுத்திருக்கிறதே. 'அழகுள்ள இடத்திலே குணம் அபூர்வம்' என்று. ஆகவே நான் பேசாமலிருந்து விட்டேன். என்னுடைய அழகுராணி, படுதாக்களுள் அழகு ராணியாகிய அந்தப் பட்டுப் படுதாவை மடித்து, அருமையாக எடுத்துக் கொண்டுபோய் பெட்டியில் வைத்தாள்.

இதுபோன ஞாயிற்றுக் கிழமை நடந்த விவகாரம். 'படிச்சவளா பார்த்துக் கல்யாணம் பண்ணிக் கோங்க

ளேன் என்று அவள் இந்த ஞாயிறன்று சொன்னால் எனக்குச் சிரிப்பு வருமா வராதா? விஷயத்தை அவளுக்குச் சொன்னால் அவளுக்குச் சிரிப்பு வருமா வராதா? படை படைக்கிற வெய்யிலிலே காரியாலயத்தை நோக்கி நடந்துகொண்டிருந்த நான் யோசித்தேன்.

"ஒவ்வொரு நாடகத்தின் முடிவிலும் பட்டுப் படுதாவின் நிழல் யாரோ வருவது போலத் தோற்றமளித்ததே, ஆனால் யாரும் வராது என்ன அதிசயம்! ஆமாம். அழகு வாய்ந்த அந்தப் பட்டுப் படுதாவினின்றும் எதுவும் சாரம் நிறைந்ததாக வரவே முடியாதுதான்!"

Ask for

Star of India Pencils

(All grades in Black, Copying & Colour)

★

Manufactured by:

THE MADRAS PENCIL FACTORY, MADRAS

ஜெயிலர்

வெ.சு. அருணாள்

‘அழகும் யௌவனமும் ததும்பும் அவள் அன்று அச் சிறைச்சாலைக்குள் அனுமதிக்கப்பட்டு 155-நெம்பர் கைதி என்று பதிவு செய்து கொள்ளப்பட்டாள். இவ்வளவு அழகான இவள்கூடவா குற்றவாளி? நம்பவே முடிய வில்லை. கண்ணியமாகவே தென்படுகிறாள்,’ என்றான் ஜெயிலர்.

சிறிது நேரம் யோசனையிலிருந்துவிட்டு ‘டேய்! 641! இவள் என்ன குற்றத்திற்காக இங்கே அனுப்பப் பட்டாள் என்று ரிஜிஸ்தரைப்பார்’, என்று கூறினான்.

641 அந்த ரிஜிஸ்தரை பார்த்துவிட்டு, ‘பெற்ற குழந் தையைக் கவனியாமல் விட்டு விட்டுப் போனதற்காக’ என்றான்.

‘ஓகோ!...அப்படியிருக்கும்! எவ்வளவு தண்டனை?’

‘ஆறுமாசம்.’

‘கடுங்காவலா?’

‘சாதாரண காவல்தான்.’

‘குழந்தை என்ன ஆயிற்று?’

‘சிசுபோஷனை சாலைக்கு அனுப்பப்பட்டதாக கண் டிருக்கிறது.’

‘ஜெயிலர் சிறிது நேரம் உலவிக் கொண்டி ருந்துவிட்டு,’ இருக்கும் எங்காவது ஏமாற்றமடைந் திருப்பாள். விசாரிக்கலாம்’ என்று 155 நெம்பர் கைதி யிருந்த அறைக்குச் சென்றான்.

'கைதியா இவள்! தேவதையைப் போலிருக்கிருள்! அழகுத் தெய்வமோ என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. திடமான என் மனம்கூட ஏனே புரளுகிறது. ஆசை என்னைப் பைத்தியமாக்கப் பார்க்கிறது' என்று ஜெயிலர் மனதிற்குள்ளாக முணுமுணுத்துக் கொண்டான். அவனது முரட்டுப்பாதங்கள் முன் செல்லத தயங்கின. 'சே! என்ன இது? அவள் யாரோ பெண்! அவளைக் கண்டதும் ஏன் இப்படி என்னிடம் மாறுதல்! மதிமயங்கி திரும்பிப்போ! உனக்கு மானமில்லை!' என்று மனசாட்சி அவனைத் திரும்பிப் போகச் சொன்னது. வராந்தாவிலே ஒரு நிமிஷம் நின்முன். எண்ணங்களின் புரசல்களில் எங்கிருக்கிருேம் என்பதையும் மறந்துவிட்டிருந்தான். 'அவள் யாரோ கெட்டுப் போனவளாகத்தா னிருக்கும். இல்லாவிட்டால் அவளுக்கு சிறைக்கு வருவது ஏன் அவ்வளவு சாதாரணமாக இருக்கிறது. இதேமாதிரி குழந்தைகளைக் கொன்று சிறைவாழ்வை அனுபவித்தப் பாவியாக இருக்கும். போகலாயா? பேசிப்பாக்கலாமா!' என்று அவன் சிந்தனைகள் சிதறின.

641 கணீர் கணீர் என்று மணியை அடித்து இரவு எழு என்பதை பலரது நினைவிற்கு கொண்டுவந்தான். ஜெயிலரின் எண்ணக் குவியல்கள் கரைந்தன.

'சார்! சார்!' இனிமையான அக்குரல் ஜெயிலரை உலுக்கியது. அவன் சரீரத்திலே ஓர் இனப உணர்ச்சி பாய்ந்து ஓடியது. யார் கூப்பிட்டார்கள் என்று அவனுக்குத் தெரியும். வேறுயார்!—அவளேதான்!

'ஏன் கூப்பிட்டாள்? அவளுக்கு என்ன வேண்டும்?' என்று மனதிற்குள் வினவியவளுக ஜெயிலர் சென்முன்.

'எனக்குப் பொழுதே போகவில்லை' என்முள் அவள்.

'இதற்கா கூப்பிட்டாள்? இவளுக்குப் பொழுது போகாவிட்டால் நான் என்ன செய்யட்டும்?' என்று ஜெயிலர் மனதிற்குள் சிரித்தான்.

'என்னுடன் பேச உங்களுக்கு இஷ்டமில்லை போலிருக்கிறது.'

'இல்லை......' என்று சங்கோஜத்துடன் பதறினன் ஜெயிலர்.

'எனக்குத் தெரிகிறது, கைதியிடம் எப்படிப் பேசுவது என்று......'

ஜெயிலர் சமாளித்துக் கொண்டு, 'அப்படியில்லை. நீங்கள் அப்படி நினைப்பதுகூட தவறுதான்' என்ருன்.

'உங்களைப் பார்க்கும்பொழுதே கண்ணியமானவர் என்று தெரிகிறது.'

ஜெயிலர் சந்தோஷப்பட்டவனுக. 'நான் தப்புதண்டாவிற்கு போகும் வழக்கமே கிடையாது' என்ருன்.

'எனக்குப் பொழுதே போகவில்லை. யாருடைய தப்பிற்கோ, நான் இங்கு அவதிப்படவேண்டியிருக்கிறது. விதி!' என்று அவள் பெருமூச்சு விட்டாள்.

ஜெயிலருக்கு இப்பொழுது அவளுடன் பேசுவதில் ஸ்வாரஸ்யம் உண்டாயிற்று. அவள் பூர்வீகத்தை அறிந்து கொள்ள அவன் மனம் துடித்தது.

'யாருடைய பிழைக்கு?'

'எல்லாம் இந்த வாலிபர்களை நம்பி நட்டாற்றில் இறங்கி இந்த கதி கிடைத்துவிட்டது.'

'எப்படி? எல்லாம் விசித்திரமாக இருக்கிறது.'

'எப்படி விசித்திரமில்லாமலிருக்கும்? கற்கண்டு என்று காதலை சுவைத்துவிட்டு விஷம் என்று வெருண்டு ஓடிவிட்டால் வாழ்க்கை ஏன் வனாந்திரமாகாது?'

'பாபம்? நீ ஏமாந்து போனுய் போலும்!'

'என்ன பணம் இருந்தாலும் குலம் இருந்தாலும் இன்றைக்கு என்ன பிரயோஜனம்? அவர் என்னை மனப்பூர்வமாக காதலித்தார். என்னென்னவோ சத்தியங்களைச் செய்தார். குழந்தை பிறக்குமுன்பே அவர் பறந்துபோய் விட்டார். இப்படியிருக்கிறது உலகம். நான் அதனுடன் விளையாடப்போய் அது என்னுடன் விளையாடிவிட்டது' என்று கண்ணீர் சொரிந்தாள் அவள்.

ஜெயிலரின் மனம் இளகிவிட்டது. அவனது சபல புத்தியும் நசித்துப்போய் இருதயம் துடிதுடித்தது. தன்னுலான உதவியை அவளுக்குச் செய்ய சித்தமாக இருந்தான்.

'விதியை நினைத்து என்னம்மா செய்வது! நடந்தது நடந்து விட்டது. என்னுலானதை செய்யத் தடையில்லை. சிறையின் அசௌகரியங்கள் உனக்கு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுகிறேன். என் சகோதரியைப் போல் உன்னை பாவிக்கிறேன்' என்று தேறுதல் கூறிவிட்டு மனோவேதனையுடன் திரும்பினுன் ஜெயிலர்.

முதல் சந்திப்பிலேயே அவள் அவனை வசப்படுத்திக் கொண்டு விட்டாள். 'சிறை' என்பது பெயரளவில்தான். அவளுக்கு வேண்டிய சகல சௌகரியங்களையும் செய்து கொடுத்தான் ஜெயிலர். தினசரி அவள் ஆடைகளை எடுத்துப்போய் லாண்டரியில் சலவை செய்ததும் திருப்பிக் கொண்டுவந்து கொடுப்பான். புஷ்பம், படிப்பதற்கு நாவல் புத்தகங்கள் அனைத்தையும் குவிப்பான். அவள் கதையைக் கேட்டதுமுதல் அவன் மனதிலே அவ்வளவு புரட்சி உண்டாகியிருந்தது. அவளுக்காக என்ன தியாகம் வேண்டுமானுலும் செய்யத் தயாராக இருந்தான். அவள் வாழ்வை குலைத்த வாலிபன் கிடைத்தால் அவனைக் கொன்று எலும்புகளை உரமாக்கவும் தயாராக இருந்தான்.

அவள் அவனை சதாகாலமும் புகழ்வாள். 'எந்த ஜெயிலர் என்னை இப்படி பராமரிப்பார்! நீங்கள் மகா உத்தமர். உங்களைப்போன்ற வாலிபரை நான் கண்டதேயில்லை. இங்கு வசிப்பது சிறைவாசம் போலவே இல்லை. உங்களுக்கு நான் என்ன கைமாறு செய்யப் போகிறேனே!' என்று அவள் கூறுவாள்.

'இதெல்லாம் மனிதன் கடமையம்மா! நான் என்ன பிரமாதமாக செய்துவிட்டேன்' என்பான் ஜெயிலர்.

இப்படியாக சகோதர பாவத்தில் எவ்வளவோ பேசிக் கொண்டிருப்பார்கள். பொழுது போவதுகூட பேச்சின் ரசனையிலே தெரியாது.

641 ஒருநாள் ஜெயிலரிடம் 'சார்! அவள் பெருத்த கள்ளிமாதிரியிருக்கிறது. ஏதாவது ஆபத்து நேரிடுமோ என்று பயமாயிருக்கிறது' என்று எச்சரித்தான். ஜெயிலர் அவன் கன்னத்திலே பளீரென்று ஒரு அறை கொடுத்து,'பாலுக்கும் கள்ளிக்கும் வித்தியாசம் தெரியாத மடப்பயல்!' என்று சீறி விழுந்தான். எப்படியோ ஆறு மாதங்கள் கடந்துவிட்டன.

'போய் வா அம்மா! எப்படியாவது அந்த வாலிபனை கெஞ்சிக் கூத்தாடி அவருடன் வாழ்க்கை நடத்த சரியான மார்க்கத்தைப்பார். என்னாலான உதவியைச் செய்ய தயங்கமாட்டேன்' என்று ஜெயிலர் கூறினன்.

'தங்கள் நன்றியை மறக்கமாட்டேன்!' என்று புன்முறுவலுடன் நளினமான நடையில் வெளியேறினள் அப்பாவை. நிறையுற்ற செல்வத்தை இழந்த பாபியைப்போல் பெருமூச்சு விட்டான் ஜெயிலர்.

பலமுறைகளில் அவளைக்காண பிரயாசைப் பட்டான் ஜெயிலர். தன்னாலான உதவியைச் செய்ய அவன் தயாராக இருந்தான். அந்த வாலிபனைக் கண்டு அவளுக்காக வாதாட விரும்பினன் ஆனல் அவள் கிடைத்தபாடில்லை. அவள் இருப்பிடமும் தெரியவில்லை. அவன் இதயத்து எண்ணங்களும் தணிந்தபாடில்லை.

தெய்வ கதியாக ஒருநாள் அவளை பீச்சிலே கண்டான். யாரோ ஒரு வாலிபனுடன் காரிலே வந்திறங்கினள் அவள். உருகுலையாத அவன் எண்ணங்கள் எவ்வெப்படியோ நர்த்தனமிட்டன. அவன்தானே அவளை ஏமாற்றிய வாலிபன் என்று சந்தேகித்தான். திரும்பவும் அவர்கள் ஒன்றுகூடியிருக்கலாம் என்று கருதினன். அவன் மனதிலே ஒரு திருப்தி உதயமாயிற்று. அவர்களோ அவனைக் கவனியாதவர்களைப்போல் சென்றனர். ஜெயிலரின் பார்வைமட்டும் ஒருவரை யொருவர் தழுவிச் செல்லும் அவர்கள் மேலேயே புதைந்து கிடந்தது.

யாரோ தன்னை முதுகில் தட்டுவதை உணர்ந்து ஜெயிலர் திரும்பிப் பார்த்தான். வேறு யாருமில்லை அவன் நண்பன் நாராயணசாமிதான்.

'ஏண்டா உனக்கு அவள்மீது தீவிர நோக்கம். ஏதாவது விநாசகாலமோ ?' என்றான் நாராயணசாமி.

ஜெயிலர் திடுக்கிட்டு, 'அவளா! பதிவிரதை என்று என்னிடம்......'என்று குமுறினான்.

'பதிவிரதையா! அப்படியானால் எல்லா விபசாரிகளுமே பதிவிரதைகள்தான். போடா முட்டாள்! அவள் கதை எனக்கல்லவா தெரியும்! 'அவள் கையால் எத்தனை கொலைகள் நடந்திருக்கும் தெரியுமா! ஒன்றும் வெளியில் வராது. போலிஸிற்கே அவளைக் கண்டால் நடுக்கம்.யாரோ ஒரு சப் இன்ஸ்பெக்டர் அவளை ஆறு மாதம் உள்ளே தள்ளிவைத்தானும். போனவாரம் தான் அவன் குத்துண்டு மாண்டான்.கொன்றவன் இவளது பேர்வழிதான். தற்கொலை என்று அதையும் அமுக்கிவிட்டார்கள்.ஏண்டா இந்தக் கொலைகாரியின் பேரில் இவ்வளவு தீட்சண்யம் ?' என்றான் நாராயணசாமி.

'அவள்கூட இருப்பது யாரோ ?'

'எவனோ ஜமீன்தாராம்! சீக்கிரம் ஓட்டாண்டியாகி விடலாம்--வாடா போகலாம்' என்றான் அவன்.

'என்ன வயனமான கதையை என்னிடம் கூறி ஏமாற்றி விட்டாளே!' என்று முணுமுணுத்தான் ஜெயிலர்.

'வஞ்சகமும் துரோகமும் நிறைந்ததடா மாயப்பிரபஞ்சம். பொய்யும் கொலையும் கொண்டதடா கார்முகில் நூழ் நானிலம்'என்று எங்கோ படித்தது அவன் செவிகளில் எதிரொலித்து இருதயத்தைத் தாக்கியது.

'பாலுக்கும் கள்ளிக்கும் வித்தியாசம் என்ன' என்பதை இப்பொழுது ஜெயிலர் நன்றாக உணர்ந்து கொண்டு விட்டான்.

- பாசரசு -

நண்புர் வீட்டில் ஓர் இரவு

"கிருஷ்ண லீலா நாடகம் ரொம்ப நன்ருக இருக்கிற தாம். இன்றைக்கு அவசியம் போகவேண்டும்," என்ருள் **சரசுவதி.**

"ஆமாம் நன்ருக இருந்தால்......?" என்று கேட் டேன் சலிப்போடு.

"இன்றுதான் கடைசி நாளாம். இன்று நாடகம் ஒன்பது மணிக்கு. அவசியம் போகவேண்டும்."

"ஒன்பது மணிக்கு நாடகம் என்ருல்......முதலில் கண் விழிக்க முடியாது. இரண்டாவதாக வீடு திரும்பு வதற்கு வண்டி கிடைக்காது!"

"டாக்ஸி கார் வைத்துக் கொண்டால் போகிறது."

"டாக்ஸிக்கு இருபத்தைந்து ரூபாய் கேட்பான்.

"அவ்வளவு பணம் செலவழிப்பதைவிட நாடகம் பார்க் காமல் இருப்பதே நல்லது!"

"சரி, ஜட்கா ஒன்று வைத்துக்கொண்டால் போகி றது. உங்கள் டைரியில் இன்றைக்கு எழுதி வைத்திருந்த எல்லா என்கேஜ்மெண்டுகளேயும் அடித்துவிட்டு நாடகத் திற்குப் போவதாக எழுதிவிட்டேன். அவசியம் போகி ருேம்," என்று சொல்லிவிட்டு என் எதிர் வாதத்தை எதிர் பார்க்காமலேயே போய் விட்டாள்.

அன்றிரவு நாடகத்திற்கு போகவே செய்தோம். நாடகம் முடிய ஐந்து நிமிஷங்களிருந்தன.

"சச்சோ, எழுந்திரு போகலாம். பிறகு ஜனங்கள் எழுந்து கலைந்து விட்டார்களானால் நம்மால் வெளியே சீக்கிரமாகப் போக முடியாது. வண்டியும் கிடைக்காது," என்றேன் நான்.

ஆனால் சரசுவதி அசையவில்லை. நடிகர்கள் மேடை மீது வரிசையாக நின்று மங்களம் பாடி திருஷ்டி கழித்துக் கொண்ட பிறகுதான் அவள் மெதுவாக இடத்தை விட்டு எழுந்தாள். இதற்குள் கூட்டம் கலைந்து விட்டது. கொட்டகையை விட்டு வெளியேறுவதற்கு எங்களுக்கு இருபது நிமிஷங்கள் பிடித்தன. வெளியே இருந்த அவ்வளவு வண்டிகளும் நாடக ரஸிகர்களை ஏற்றிக் கொண்டு பறந்து சென்று விட்டன. ஒரு வண்டி.கூட மிச்சமாக நிற்க வில்லை.

"பார்த்தாயா, நான் அப்பொழுதே சொன்னேனே; சீக்கிரம் எழுந்து வா என்றால் அரச மரத்தடிப் பிள்ளையார் மாதிரி உட்கார்ந்து கொண்டிருந்தாயே! இப்பொழுது வீட்டுக்கு எப்படி......?"

"அதற்காக நாடகத்தை அறைகுறையாகப் பார்த்து விட்டுவர வேண்டுமா?"

"இப்பொழுது வீட்டுக்கு எப்படி......?"

"நிறைய வண்டிகள்விட இவர்களுக்கென்ன கேடு?" என்று வண்டிக்காரர்களையும், நாடகத்தை ஒன்பது மணிக்கு வைத்துக் கொண்டதற்காக நாடகக் கம்பெனியையும் குறை கூறினாள்.

"நீ பிந்தி வந்துவிட்டு அவர்களைக் குறை கூறுவதால் என்ன பிரயோஜனம்?"

"ஆமாம், நாம் முந்திவந்து ஏறிக்கொண்டால் இப்பொழுது அந்த வண்டியில் சென்றிருப்பவர் பிந்திவந்து வண்டிகிடைக்காமல் கஷ்டப்பட்டிருக்க வேண்டும்! சரி, மேலே நடக்க வேண்டியதைக் கவனியுங்கள்!" என்றாள் சரசுவதி.

நல்ல காலமாக நாங்கள் தேடிப்போகாத தெய்வம் ஒன்று குறுக்கே வந்துநின்றது. எப்பொழுதோ

பத்து வருஷங்களுக்கு முன்பு என்னுடன் படித்த ஒருவர் என்னை அடையாளம் கண்டுகொண்டு என்னுடன் பேசினார். அவரை எனக்கு நினைவில்லை. என்னுடைய க்ஷேம லாபங்களை ஒருவாறு கேட்டறிந்து கொண்டு, "இங்கே எங்கே வந்தீர்கள்?" என்று கேட்டார்.

விஷயத்தை ஒருவாறு சொல்லி முடித்தேன்.

"என்னஸார், நான் இருக்கிறேன் பயப்படாதீர்கள். உங்கள் நண்பனாக இருந்து வேறு எந்தவிதத்தில் உதவி செய்யப் போகிறேன்? என்வீடு அடுத்தத் தெருவிலிருக்கிறது, வீட்டு நம்பர் 24-25. கிட்டேதான் இருக்கிறது. இரவு இங்கே தங்கிவிடுங்கள். காலையில் எழுந்து போய் விடலாம். என் குடும்பம்கூட ஊரிலில்லை. வீடு காலியாக இருக்கிறது. என் அறையைக் கொடுக்கிறேன். சுகமாக நீங்கள் இருவரும் தூங்கலாம்," என்றார்.

24-25...பெரிய வீடாகத்தானிருக்க வேண்டுமென்றெண்ணி நண்பர் வீட்டில் தங்க முடிவு செய்துவிட்டேன்.

"எங்களால் உங்களுக்கு ரொம்ப சிரமம்..."என்றாள் சரசுவதி இடையில்.

"அடடா, சிரமமா! அப்படிச் சொல்லாதீர்கள்... இந்த உதவிகூடச் செய்யாவிட்டால...ம்ம்...வாருங்கள்," என்று சொல்லிவிட்டு நண்பர் நடக்கலானார். நாங்கள் அவரைப் பின் தொடர்ந்தோம். அவர் ஒரு பிரம்மாண்டமான வீட்டின்முன்போய் நின்றார். ஏது நண்பர் பெரிய தனவந்தர் போலிருக்கிறது என்று நினைத்துக்கொண்டேன்.

உள்ளே நுழைந்தோம். ஒரு கூடம்மாதிரி இருந்தது. அதை ஒரு பலகையால் பாகிஸ்தான் செய்யப்பட்டிருந்தது. அதில் ஒரு பாகத்திற்கு எங்களை அழைத்துச் சென்றார் நண்பர். ஒரு பழைய பாய், ஒரு துப்பட்டி, ஒரு தலைகாணி, ஒரு மணை, இவைகளைக் கொண்டு இரண்டு படுக்கைகளைத் தயார் செய்தார்.

"நீக்கள் இங்கே படுத்துக் கொள்ளுங்கள். நான் தெருவிலிருக்கிற ஒட்டுத் திண்ணையில் படுத்துக் கொள்கி

றேன்,'' என்று சொல்லி விட்டு எங்களிடமிருந்து ஒருவித மான கேள்வியையும் எதிர்பார்க்காதவர் போல் சென்று விட்டார்.

என் தலையின் கீழே மணையை வைத்துக் கொண்டு சரசுவதிக்கு தலைகாணியைக் கொடுத்தேன். அவள் தனக்கு மணைபோதுமென்று சொல்லித் தலைகாணியை என்னிடம் திருப்பிவிட்டு மணையை எடுத்துக் கொண்டாள்.

"உங்கள் இனத்தாரை மலருக்கு ஒப்பிடுகிறார்கள். உன் தலையை மெத்தென்று இருக்கிற தலைகாணிதான் தாங்கவேண்டும்,'' என்றேன்.

"பாவம், நீங்கள் இரவும் பகலுமாக யோசித்து யோசித்து குப்பை கதைகளை எழுதுகிறீர்கள். களைப் படைந்திருக்கும் உங்கள் தலைதான் தலைகாணியில்......''

இப்படியே போட்டி போட்டுக்கொண்டு கடைசியில் தலைகாணி, மணை இரண்டையும் உபயோகிக்காமலேயே படுத்துக்கொண்டோம்.

வீடு பழையகாலத்துவீடு. நாங்கள் படுத்திருந்த பாகத்தில் ஒரு ஜன்னல்கூட கிடையாது. ஒரே புழுக்க மாக இருந்தது. கொஞ்ச நேரத்திற் கெல்லாம் கூடத்தை பாகிஸ்தான் செய்த பலகையின் கீழிருந்து உஸ்......உஸ் ......என்று சூடான காற்று என் கைமீது அடித்துக் கொண்டிருந்தது. சில நிமிஷங்கள் கழிந்து...ங்ஆஆக்... என்று சத்தம் உண்டாகவும் அந்த பலகைக்கு மறு பக்கத் தில் ஒருவர் தூங்கிக் கொண்டு குறட்டை விடுகிறார் என் பதைக் தெரிந்து கொண்டேன். தூக்கம் வருவதாகக் காணேம். கண்களை இறுக மூடி அவைகளைப் பலாத்காரம் செய்துப் பார்த்தேன். தூக்கம் ஹர்த்தால் செய்து விட்டது.

கால் மணி நேரம் சென்றிருக்கும். ஏதோ இரண்டு என்மேல் விழுந்தடித்துக் கொண்டு சென்றன. அலறி அடித்துக்கொண்டு எழுந்து உட்கார்ந்து அந்த நபர்களைப் பார்த்தேன். அரை டன் கனமுள்ள இரண்டு திண்டு பெருச்சாளிகள் வாசலுக்கு ஓடி சாக்கடை துவாரத்தில் நுழைவது அந்த இருட்டிலும் தெரிந்தது.

மெதுவாக "சரசுவதி" என்று கூப்பிட்டேன். பதிலில்லை. மறுபடியும் கூப்பிட்டேன். பதில் இல்லை. பிறகு தட்டி எழுப்பிய பிறகுதான் அவளுக்குத் தூக்கம் கலைந்தது.

"எதற்காக என்னை எழுப்பினீர்கள்?" என்று கண்ணை கசக்கிக் கொண்டே கேட்டாள் சரசுவதி.

"என்னடி அப்படிப்பட்ட தூக்கம்?"

"தூக்கம் தலையைச் சுற்றுகிறது. எதற்காக எழுப்பினீர்கள் சொல்லுங்கள்!"

"இதோபார், எனக்கு இந்தப் புதிய இடத்தில் தூக்கம் வரமாட்டேன் என்று சத்தியாக்கிரஹம் செய்கிறது. பொழுது விடியுமட்டும் பேசிக் கொண்டிருந்து விட்டுப் போகலாம்."

"உங்களுக்கு வேறு வேலை இல்லை?" என்று சொல்லி விட்டு திரும்பவும் படுத்துக் கொண்டாள்.

சரசுவதியும் என் பொழுது போக்கில் கலந்துகொள்ள மறுத்துவிட்டதால் வேறுவழியில்லாமல் கண்களை மூடிக் கொண்டு தியானத்தில் மூழ்கினேன். 'பளார் பளார்' என்று யாரையோ அடித்த சத்தத்தைக்கேட்டு கண்விழித்தேன். அந்த சத்தத்தைத் தொடர்ந்து 'குய்யோ முறையோ' என்ற கூக்குரல். அதைத் தொடர்ந்து இரு சாரர்களுக்கு இடையில் காதால் கேட்க முடியாத வசை மொழிகள். அவர்கள் வசைமொழிகளை மாற்றிக் கொண்டதிலிருந்து அவர்கள் புருஷன் மனைவி என்று தெரிய வந்தது. ஏதோ அந்த நேரத்தில் அவர்களுக்கிடையே சச்சரவு வந்து விட்டது. திரும்பிப் பார்த்தேன். சரசுவதி நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தாள். அவளை எழுப்பலாமா என்று நினைத்தேன். என்னுடன் ஒற்றுமையாகக் காலத்தைக் கழிக்கும் அவள் அதைக் கேட்டு, கற்றுக் கொண்டால்! அவளை எழுப்பவில்லை. வசைமொழிகள் நின்று, மனைவியின் தேம்பலும் குறைந்து கொண்டே வந்து நிசப்தம் நிலவியது.

காலையில் மணி நாலிருக்கும். ஒரே ரகளை. வீட்டு வாசலில் இருந்த குழாயடியில் பித்தளைச்சாமான்களைப் போடும் சத்தமும், தண்ணீர் பிடிப்பதில் போட்டி போட்டுக்கொண்டு ஒருவரை யொருவர் வைது கொண்டது காதைப்பிளந்தது. அந்த வீட்டில் சுமார் அறுபது எழுபது ஸ்திரீகள் இருந்திருக்கவேண்டும்! நண்பர் தன் குடும்பம் ஊரில் இல்லை என்று சொன்னரே! இவர்களெல்லாம் யார் என்று யோசித்தேன். இவ்வளவு காலையில் இவர்கள் ஏன் இப்படி கலாட்டா செய்கிருர்கள் என்று யோசித்தேன். இருந்தாலும் ஒரு திருப்தி ஏற்பட்டது. சரசுவதியை எழுப்பிச் சொன்னேன்.

"இதோபார், இவர்களெல்லாம் எவ்வளவு சுறு சுறுப்பாக காலையில் எழுந்து வேலை செய்கிருர்கள்! நீ தினம் காலையில் பத்துமணிவரையில் தூங்குகிருயே!" என்றேன். அதை அவள் காதில் வாங்கிக் கொண்டாளோ இல்லையோ. திரும்பிப் பார்த்தபோது திரும்பவும் தூங்கிக் கொண்டிருந்தாள்.

பொழுது விடிந்தது. நண்பர் எழுந்து உள்ளே வந்த போது நாங்கள் படுக்கையில் உட்கார்ந்து கொண்டிருந்தோம்.

"என்ன இதற்குள் எழுந்து விட்டீர்களே!" என்று கேட்டார் நண்பர்.

"எழுந்து விட்டதாவது. இரவு தூங்கியிருந்தால் தானே எழுந்திருப்பதற்கு. இரவு வைகுண்ட ஏகாதசி தான்...... இரவு பூராவும் வீட்டில் கலாட்டாதான்."

"என்ன ஸார் செய்கிறது. இந்த வீட்டில் மொத்தம் பதினெட்டு குடும்பங்கள். எங்களுக்கெல்லாம் பழகிவிட்டது......?" என்ருர்.

"அதை இரவே சொல்லியிருக்கலாமே" என்றேன்.

"அவர் விளையாடுகிருர். நன்ருகத்தான் தூங்கினேம்," என்ருள் சரசுவதி.

பிறகு அப்பீல் ஏது?

Printed at the Commercial Printing & Publishing House, Madras 1
P.I. Card Q.H. No. M/S 120 A For M/S Basaras Karyalayam P.I. Card Q.H. No. MS 409

அம்பி

பாசரசு

☆

" எனக்கு வயதென்னமோ
எட்டுதான். உனக்கு எட்டு
வயதுதானே ஆகிறது, உன்
னைப் பற்றி எழுத உனக்கு
என்ன தெரியுமென்று என்
னைக் கேட்காதீர்கள். இதைப்
படித்துவிட்டு சொல்லுங்கள் "
என்கிறான் அம்பி.

விலை ரூ. *1—0—0*
தபாலில் ரூ. *1—4—0*

☆

பாசரசு காரியாலயம்

45-46, அரண்மனைக்காரத் தெரு, சென்னை 1.

வெள்ளி, தங்கம், வைர நகைகளுக்கு
P. A. ராஜு செட்டியார் & பிரதர்
கோயமுத்தூர்
தந்தி : ராஜா
போன் : 218 . A